இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப் பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

● மாதம் இரு இதழ் ● 424 1992 அக்டோபர் 09 வெள்ளிக்கிழமை

University ... Lanka
Periodicals Division
Library

வாசியுங்கள்




விலை 25.00

தொடர்புகளுக்கு:
ஆனந்தவக்கும்புற,
இல-90,
மாளிகாகந்த வீதி,
கொழும்பு-10.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் சோசலிஸ்ட் வேட்பாளர்

## ஹெலன் ஹெல்யாட் உங்கள் முன் பேசுகின்றார்



அமெரிக்க ட்ரொட்ஸ்கிசக் கட்சியான வேர்க்கஸ் லீக்கினால் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள ஹெலன் ஹெல்யாட் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அழைப்பின் பேரில் அக்டோபர் 12ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்கின்றார். அவர் இங்கு தங்கியிருக்கும் ஒரு வாரகாலத்தில் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் தொழிலாள– ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் உரைநிகழ்த்தவுள்ளார்.

'வேர்க்கஸ் லீக்' நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் தோழமையுடன் செயற்படும் அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கமாகும்.

நவம்பர் 3ம் திகதிய அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் உரைநிகழ்த்தும் பொருட்டு உலக சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள ஹெலன் ஹெல்யாட், இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக பிரித்தானிய, ஜேர்மன் ட்ரொட்ஸ்கிசக்கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள கூட்டங்களில் உரை நிகழ்த்தவுள்ளார். இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா செல்லும் ஹெல்யாட், நான்காம் அகிலத்தின அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியக் கிளையான சோசலிச லேபர் லீக்கினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கூட்டங்களில் கலந்து கொள்வார்.

இலங்கையில் அவர் உரை நிகழ்த்தும் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இளம் சோசலிஸ்டுகளும், தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்கள், மாணவர்கள், இளைஞர்களை வேண்டுகின்றன, இந்த ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு வேர்க்கஸ் லீக்கினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் இப் பத்திரிகையில் பிரசுரமாகின்றது. ஹெலன் ஹெல்யாட் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளின் விபரம் இங்குகொடுக்கப்பட்டுள்ளது:

**பத்திரிகையாளர் மாநாடு**

★ அக்டோபர் 12 மாலை 3 மணி

**பகிரங்கக் கூட்டங்கள்:**

பொதுஜன நூல்நிலயை மாநாட்டு மண்டபம், கொழும்பு—7

★ அக்டோபர் 13 மாலை 3 மணி
அம்பலாங்கொட நகர மண்டபம்

★ அக்டோபர் 14 மாலை 4 மணி
''சம்பத் மண்டபம்''
சிங்கள வர்த்தக முன்னணி மண்டபம்
'லேக் றவுண்ட்' கண்டி

★ அக்டோபர் 15 மாலை 5 மணி
பேராதனைப் பல்கலைக் கழகம்
கலை மண்டபம்

★ அக்டோபர் 16 மாலை 4 மணி
பண்டாரவளை நகர மண்டபம்

★ அக்டோபர் 18 மாலை 3 மணி
அரசாங்க லிகிதர் சேவை சங்க மண்டபம்,
சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்த, கொழும்பு-2

★ அக்டோபர் 19 மாலை 4 மணி
கொழும்பு பல்கலைக் கழக மாணவர் நிலையம்

**சுதந்திர வர்த்தக வலயச் சுற்றுலா**

★ அக்டோபர் 20

## உலகம் பூராவும் நாணய நெருக்கடி உக்கிரம்:

# உலக முதலாளித்துவ மரண ஓலம்

கடந்த சில வாரங்களாக உலக நிதி அமைப்பில் மீண்டும் ஏற்பட்டுள்ள பூகம்பங்களும், ஐரோப்பிய நாணய அமைப்பின் வீழ்ச்சியும் ஏகபதிபத்திய அமைப்பின் நெருக்கடியின் புதியதும் உக்கிரமுமான கட்டத்தைக் குறிக்கின்றது, இந்தப் பயங்கரமான பூகம்பங்கள் ஏகாதிபத்தியம் மனித இனத்தைப் பிரமாண்டமான பேரழிவுக்கு இட்டுச் செல்லப் போகின்றது என்பதற்கு நல்ல சாட்சி.

ஸ்டாலினிச ஆட்சியாளர்களின் வீழ்ச்சி 1989ல் கிழக்கு ஐரோப்பாவில் ஆரம்பமாகி 1991ல் சோவியத் யூனியனின் வீழ்ச்சியோடு உச்சக் கட்டத்தை அடைந்தது. இதில் இருந்து முழைத்த 'கொம்பிதோர்' (தரகு முதலாளித்துவம்) கும்பல்கள் தேசிய மயமாக்கப்பட்ட சொத்துக்கள் உட்பட தொழிலாளி வர்க்க வெற்றிகளைப் பலியிட்டு வந்த அதே வேளையில் ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களின் கைக்கூலிகளும், 'சோசலிசம் பொய்த்து விட்டது, எனக் கூச்சலிட்டனர், அத்துடன் நின்றுவிடாது முதலாளித்துவமே ஒரே உண்மையான அமைப்பு என்ற மாயையைப் பரப்புவதிலும் ஈடுபட்டுள்ளனர், 1992ம் ஆண்டு ஐரோப்பிய நாடுகள் ஐக்கியப்பட்ட ஆண்டாக மிளிரும் எனவும் முதலாளிகள் ஜோதிடம் கூறியிருந்தனர். ஆனால் இன்று நடந்தது என்ன? முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகள் ஏகாதிபத்திய அரசாங்கங்களதும், மத்திய வங்கிகளதும் கணிப்புக்களையும், குறிப்புக்களையும் கிழித்து வீசியுள்ளது,

ஐரோப்பிய பொருளாதார ஒருங்கிணைப்புத் தொடர்பான மாஸ்ரிட் உடன்படிக்கையின் மீது செப்டம்பர் 27ல் நடைபெற்ற கருத்துக் கணிப்புக்கு எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. உடன்படிக்கைக்குச் சார்பாக 50'95%மும் எதிராக 49 5 %மும் வாக்களித்தனர். இதனால் பிரான்சிய மிட்ரொண்ட் அரசாங்கத்தினதும், உடன் படிக்கைக்குச் சார்பானவர்களதும், திட்டங்கள் ஆட்டம் கண்டதைத் தொடர்ந்து இந்த நெருக்கடி மேலும் உக்கிரம் கண்டுள்ளது. பாசிஸ்டுகள் மட்டுமன்றி பேர் போன இனவாதிகளும்,உடன்படிக்கையை எதிர்த்து வாக்களித்தனர்,

### செலாவணி நெருக்கடி

இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்கு ஒரு சில தினங்களுக்கு முன்னதாக ஐரோப்பிய வெளி நாட்டுச் செலாவணி விகிதத்தில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களும்! பதட்டமும் மாஸ்ரிட் உடன்படிக்கையின் அத்திவாரத்தையே தகர்த்து எறிந்து விட்டது. இந்த நாணயப் பதட்டங்கள் அரசாங்கங்களையும் மத்திய வங்கிகளின் பெரும் தலைகளையும் அதிர்ச்சியடையச் செய்ததோடு ஐரோப்பிய அரசுகளில் பெரிதும் வங்குரோத்தடைந்த பிரித்தானியா இத்தாலி, ஸ்பெயின் அரசாங்கங்களை வட்டி வீதங்களை கூட்டுவதிலும் நாணயப் பிணைப்பை மாற்றுவதிலும் வெறிபிடித்து அலையச் செய்தது. பிரித்தானியா வட்டி வீதத்தை இரு தடவைகள் — 5%ஆல் உயர்த்தியது. எனினும் இந்நடவடிக்கை மூலம் (பிரித்தானிய) ஸ்டேர்லிங் பவுணில் இருந்து (ஜேர்மன்) மார்க்குக்கு நாணயப் பிணைப்பு இடம் பெயர்வதைத் தடுத்துவிட முடியவில்லை. இந்த ஐரோப்பியக் கூட்டின் மற்றோரர் நாடான சுவீடன் அதன் முக்கிய வட்டி வீதத்தை 500 %ஆல் கூட்டியது,

நாணய மாற்று வீதங்களில் பதட்டம் ஏற்படும் வேளைகளில் மத்திய வங்கிகள் வழமையாகக் கையாண்டு வந்த விதிமுறைகள் இம்முறை ஸ்திரப்பாட்டை ஏற்படுத்தக் கைகொடுக்கவில்லை. இந்த நாணயங்களைக் கொள்வனவு செய்வதன் மூலம்—அதாவது செயற்கையான கேள்வியை சிருஷ்டிப்பதன் மூலம் இவற்றின் பெறுமானத்தை செலாவணி விகித முறையுடன் கட்டிப்போட ஐரோப்பிய மத்திய வங்கிகள் எடுத்த முயற்சிகள் தோல்விகண்டன. இதைத் தொடர்ந்து இந்த நாணய அலகுகளின் தலைவிதியைத் தீர்மானிப்பது அவற்றின் பொறுப்பிலேயே விடப்பட்டது.

(10 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

## எமது எண்ணம்

# இனவாத யுத்தமும் ஏகாதிபத்தியப் படைகளை அழைக்கும் முயற்சியும்

இனவாத யுத்தத்தின் அகதிகளுக்கு விநியோகித்து வந்த அற்ப சொற்ப உலர் உணவுப் பங்கீட்டை வெட்டவும், அகதிகளை அனாதரவான நிலையில் பலவந்தமாக அவர்களின் இடங்களுக்குத் திரும்பிக் கலைக்கவும் யூ. என். பி. அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் பரந்தளவிலான பட்டினிச் சாவுகளைச் சிருஷ்டிக்கும் திட்டத்தின் ஒரு பாகமாகும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கின்றது,

கடந்த மாதம் அளவில் நாட்டின் பல்வேறு முகாம்களிலும் தங்கியிருந்த யுத்த அகதிகளின் எண்ணிக்கை 600,000 இதைவிட சுமார் 2 இலட்சம் அகதிகள் உற்றார் உறவினருடன் தங்கியுள்ளனர். இதைவிட இலட்சக் கணக்கானோர் இந்தியாவுக்கும் மற்றும் நாடுகளுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர். முகாம்களில் இருப்போரில் 2 இலட்சம் குழந்தைகளும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. மனித ஜீவியத்துக்குரிய இலட்சணங்கள் எதையும் கொண்டிராத இம் முகாம்களில் உயிரைத் தன்னும் பிடித்து வைக்க அவசியமான பங்கீட்டு உணவுப் பொருட்களையும் வெட்டிக் குறைப்பது என்பது இனவாத யுத்தத்தின் காட்டுமிராண்டித் தனங்களை அகதிகள் முகாம்களுக்கும் முழுப்படியே விஸ்தரிப்பதாகும்.

சமீபத்தில் இந்த உலர் உணவுப் பொருட்கள் வெட்டுப் பற்றிய விடயம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்தபோது முதலாளித்துவ சி, ல. சு. க,, தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், சந்தர்ப்பவாத சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ கட்சிகளின் அங்கத்தவர்கள் பிரேமதாச அரசாங்கத்துக்கு எதிரான மோசடி விமர்சனங்களைத் தூக்கி வீசியபோதும், இனவாத யுத்தத்திற்கு முண்டு கொடுக்கும் இச் சகல கட்சிகளும் யுத்த அகதிகளை பட்டினி போட்டுக் கொல்லும் பிரேமதாச அரசாங்கத்தின் நடவடிக்கைக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

இராணுவச் செலவினங்களை அரசாங்கம் 2000கோடி ரூபாக்களாக உயர்த்தியுள்ள நிலையில் அதை மேலும் பல கோடிகளால் உயர்த்தும் பிரச்சாரத்தில் இராணுவத் தளபதிகள் நேரடியாக ஈடுபட்டுள்ளனர், 92/93 ஆண்டுகளுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் வெளிவரவுள்ள இன்றைய நிலையில் இராணுவத் தளபதிகள் பாதுகாப்பு அமைச்சரின் செயலாளருடன் சேர்ந்து, திறைசேரியின் செயலாளரைச் சந்தித்ததாகச் செய்திகள் வந்துள்ளன. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் 'கொம்பிரதோர்' ஆட்சியாளர்கள் இராணுவத் தளபாடங்களை மலிவாகவும், கடனுக்கும் விற்பனை செய்ய முன்வந்திருப்பதைத் தொடர்ந்து உஜார் அடைந்துள்ள இராணுவமும், யூ. என். பி. அரசாங்கமும் புதிய குண்டு வீச்சு விமானங்களையும், செயின் புளக் டாங்கிகளையும் படுகொலை இராணுவத் தளபாடப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளத் துடிக்கின்றனர். இந்த தயாரிப்புடன் உலர் உணவு பங்கீட்டு வெட்டுக்கு ஒதுக்கீட்டு நிதி காய்ந்ததே காரணம் என்ற விளக்கத்தை ஒப்பிட்டுப் பாருங்கள்!

யுத்தத்தையும், யுத்தத்தின் பின்னணியில் வளர்ச்சி கண்டு வரும் நிலைமையையும் தொழிலாளிவர்க்கம் முழு அளவில் கவனத்துக்கு எடுத்தாக வேண்டும்,இந்த யுத்தம், ஆரம்ப காலம் தொட்டே நாம் கூறிவந்துள்ளது போல் முழுத் தீவினதும் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களை இராணுவ பாசிச சர்வாதிகாரத்தினால் நசுக்கித் தள்ளும் யுத்த இயக்கத்தின் ஒரு பாகமாகும். தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை நசுக்குவதன் மூலம் பிரேமதாச அரசாங்கம் இம் மக்களுக்கு எதிரான சர்வாதிகாரத்தை திணிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்த யுத்தத்தின் இலக்கு என்ன? ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ பகற்கொள்ளையை ஊர்ஜிதம் செய்வதே.

ஏகாதிபத்தியத்தை தூக்கி வீசும் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக இலங்கை — தமிழ்ஈழம் சோசலிசக் குடியரசை கட்டியெழுப்புவதே இன்றைய காட்டுமிராண்டி இனவாத யுத்தத்திற்கான தீர்வாகும், வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று! தமிழ் தேசிய இனத்தினரின் சுயநிர்ணய உரிமையை பேணு! என்ற பிரச்சாரத்தினை முன்னெடுப்பதன் மூலம் இப் போராட்டத்தினை முன்னெடுக்குமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளி — ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றது.

ஏகாதிபத்திய எஜமான்களின் கோரிக்கையை பூர்த்தி செய்ய பிரேமதாச அரசாங்கம் இனவாத யுத்தத்தினை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி வரும் அதே நிலையில் ஏகாதிபத்திய வாதிகளின் நேரடித் தலையீட்டைக் கோரிச் செய்யப்படும் பிரச்சாரம் தொழிலாள வர்க்கத்துக்கும், தமிழ தேசிய இனத்துக்கும் பாரியபிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மட்டுமன்றி அவர்களுடன் நெருக்கமான ,யாழ்ப்பாண பிரஜைகள் குழுவும் பிரேமதாச இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் ஏற்படக் கூடிய இரத்தக்களரியை தவிர்க்குமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது. இந்த ஏகாதிபத்திய ஐ. நா. சக்கு இரத்தக் களரியைத் தடுப்பதற்கு உள்ள யோக்கியதை பற்றி இங்கு நாம் நீட்டி எழுத வேண்டிய அவசியம் இல்லை0 இது பழைய யூகோசலாவியாவை பங்குபோட்ட ஸ்டாலினிஸ்டுகள் சிருஷ்டித்த முதலாளித்துவ தேசியவாதிகள், தமது பங்கினைக்காக்க' மனித உரிமைகள் காக்கும்' பேரில் ஏகாதிபத்திய பேர்ப்பலகை தாங்கிய ஐ. நா. வின் ஏகாதிபத்தியப் படைகளை அழைத்த படுபிற்போக்கு நடவடிக்கைக்கு ஒப்பானதாகும்.

பிரேமதாச அரசாங்கம் இனவாத யுத்தத்தை நடாத்துவது நாட்டை காப்பதற்கு அல்ல ஏகாதிபத்திய வாதிகளுக்கு விற்றுத்தள்ளும் நடவடிக்கை, யாகும். அவ்வாறே தமிழ் முதலாளிகள் தமது போராட்டத்தை கொண்டு நடாத்துவது தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை காப்பதற்கு அன்றி ஏகாதிபத்தியவாதிகளின் கைக்கூலி காட்டுமிராண்டி முதலாளித்துவ வர்க்க ஆட்சியைத் திணிப்பதாகும். இது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை கட்டியெழுப்புவதில் இலங்கை— தமிழ் ஈழம் பிரதெசத்தில் வாழும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் இணைவதைத் தீர்க்கமாக்கியுள்ளது.

# தோட்டத்துறை புதிய தாக்குதல்கள்

## தனியார் மயமாக்கத்தின் சுயகோலத்தை காட்டுகின்றது

தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப் பட்டவுடன் தோட்டத் தொழிலாளர் பல தாக்குதல்களை எதிர்கொண்டுள்ளனர். வேலைநீக்கங்கள், வேலை துரிதப்படுத்தல், சம்பளம் வெட்டு, இளைஞர்களை தொழிலில் சேர்க்காமை போன்ற இன்னோரன்ன தாக்குதல்களுக்கான அடக்குமுறைகளை இன்று தோட்ட தொழிலாளர் எதிர் கொண்டுள்ளனர்.

யூ. என். பி அரசாங்கம் தனியார் கம்பனிகளுக்கு தோட்டங்களை கையளித்ததுடன் ஆரம்பமான இத்தாக்குதல்களுக் கெதிராக தோட்டத் தொழிலாளரிடையே வெடித்தெழும் எதிர்ப்பு இன்று பல்வேறு வடிவம் எடுத்துள்ளது. தோட்டங்கள் கையேற்கப்பட்டதை தொடர்ந்து வேலை நிறுத்தங்கள் வெடித்தெழுந்ததுடன் ஆகஸ்ட் 28ம் திகதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமும் இடம்பெற்றது, ஏகாதிபத்திய வங்கியாளரின் ஆணைப்பிரகாரம் கட்டவிழ்க்கப்பட்ட தோட்ட தனியார் மயமாக்கலினால் ஏற்பட்டுவரும் தாக்குதல்கள், காலனித்துவ சுரண்டல்களுக்கு வழிகோலும் அடக்குமுறையிலிருந்தும் தோட்டத் தொழிலாளர் மீள வேண்டுமாயின் மிகவும் பரந்த முறையில் தயாராக வேண்டும் என்று நாம் கூற விரும்புகிறோம். இ. தொ. கா. தொண்டமான் — செல்லச்சாமிகளையும், தொழிற்சங்கக் கமிட்டியின் நடேசன்-இராமையா -விக்ரமபாகு ருணாரத்ன தலைமையும் களுக்காள் நடாத்தி வரும் வாயடிப்புகள், குத்து வெட்டுக்களை இட்டு மிக எச்சரிக்கையாகஇருக்கும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோட்ட தொழிலாளரை வேண்டுகின்றது.

தொண்டமான் — செல்லச்சாமி தலைமைகள் யூ. என். பி. அரசாங்கத்தின் தோட்ட தனியார் மயப்படுத்தலுக்கு பகிரங்கமாக தோள் கொடுத்த ''அலுகோசு'' களாவர், தனியார் மயமாக்கத்துடன் தோட்டத் தொழிலாளரது நிலைமை முன்னேறும் என தொண்டமான் உறுதியுரை வழங்கினாலும் தோட்டத் தொழிலாளர்கள் இன்று தம்க்கு எதிரான தாக்குதல்கள், அடக்குமுறையை நன்கு உணரத் தலைப்பட்டுள்ளனர். தொண்டமான் — செல்லச்சாமி தலைமை இன்று தொழிலாளரை கொடிய சுரண்டலுக்கு அடக்கி வைக்கும் பொலிஸ்காரனாகத் தமது தொழிற் சங்கத்தை மாற்றியுள்ளது

நடேசன் — இராசையா — விக்ரமபாகு கருணாரத்னாகள் செல்லச்சாமி—தொண்டமான் தலைமையிலிருந்தும் வேறுபடுவது எப்படி? யூ,என் பி. அரசாங்கத்துள் குந்தியிருக்கவில்லை, அவ்வளவுதான் தொண்டமான்–செல்லச்சாமி தனியார் மயமாக்கலில் பங்குபற்றிய மாபெரும் துரோகிகள் இவர்கள் என தொழிற் சங்க கூட்டுக் கமிட்டி குற்றம் சாட்டியது. தொ, கூ. க, சந்தர்ப்பவாத தலைமை தனியார் மயமாக்கலுக்கு முன் அதற்கெதிரான எந்தவொரு போராட்டத்தையும் நடத்தவில்லை, பெரும் தொழிற் சங்கமான இ. தொ. கா. வாளாவிருக்கையில் சிறு தொழிற் சங்கமான எம்மால் எதுவுமேசெய்ய முடியாது என்பதே இவர்களின் நிலைப்பாடாக இருந்தது,

ஆகஸ்ட் 28ல் தோட்டத் தொழிலாளர் தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பொருட்டே வேலை நிறுத்தம் செய்தனர், எனினும் தொ. கூ, க. தலைமை அரசாங்கத்துக்கு சமர்ப்பித்த கோரிக்கை, புதிய தோட்ட நிர்வாகிகள் தொழிற் சங்கத் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்பதே. தொ. கூ, க,தலைவர் எஸ். நடேசன், தனியார் மயமாக்கலின் பின் புதிய நிர்வாகம் தொழிற்சங்க தலைமைகளுடன் பரஸ்பரம் சமரச போக்குடன் செயலாற்ற வேண்டுமெனவும் அரசாங்கம் இதை உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிக்கை விடுத்துள்ளார். தொழிற்சங்க உரிமையை நிலைநாட்ட பிரச்சாரம் செய்வது ஒன்று, எனினும் இத்தொழிற் சங்க தலைமைகளது இலக்கு வேறொன்றாகும். தொழிலாளர் தமது உரிமைக்காக போராடுவதும், அப் போராட்டத்தின் அமைப்பாக தொழிற் சங்கத்தை பயன்படுத்துவதும் அத்தலைமையில் உள்ள துரோக தலைமையை தூக்கி வீசி புரட்சிகர தலைமையை கட்டி எழுப்புவதால் மட்டுமே சாத்தியமாகும்,

தோட்டத் தொழிலாளர்களை தமது கரங்களுள் இ, தொ, கா, தலைமை வைத்திருப்பதை தமது கரங்களுக்கு மாற்றுவதே நடேசன் — இராமையா — கருணாரத்ன தலைமையின் நோக்கம். இந்த 'உரிமையை' தனிப்பட்ட கம்பனிகள் தொ,கூ,க. க்கு வழங்கவேண்டும் என்பதே இத்துரோகத் தலைவர்களின் இலக்கு, இந்நிலையில் புரட்சிகர சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் புதிய தலைமையை கட்டி எழுப்புவது தோட்டத் தொழிலாளர்களின் தீர்க்கமான பணியாகி உள்ளது.இதன் மூலம் மட்டுமே தோட்டங்களை ஏகாதிபத்திய, முதலாளித்துவக் கம்பனிகளின் பிடியில் இருந்து தொழிலாளர்களின் கட்டுப்பாட்டிலான தேசிய மயமாக்கப்பட்ட செயத்து முறையையும் தொழிலாளர் சோவியத்துக்களின் அடிப்படையிலான தொழிலாளர் —விவசாயிகள் அரசாங்கத்தையும் நிறுவ முடியும். இந்த இலக்கில் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்க அங்கத்தவராகச் சேருமாறு 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்கனில் கைவைக்காதே!

## வேர்க்கஸ் லீக் அரசியல் குழுவின் அறிக்கை



குண்டு வீச்சினால் அகதிகளாகியுள்ள பொஸ்னியன் முஸ்லீம்கள்

1 யூகோசலாவிய உள்நாட்டு யுத்தத்தில் ஒரு ஏகாதிபத்திய இராணுவத் தலையீட்டுக்கான தயாரிப்புக்கள் வளர்ச்சி கண்டுவருவதை 'வேர்க்கஸ் லீக்' கண்டனம் செய்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையிலான மூன்று பெரும் ஏகாதிபத்திய வல்லரசுகளும் — அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்சு — துயரத்துக்குள்ளாகி உள்ள பொஸ்னியா — ஹேர்ஸ்கோவினா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கும் பேரில் இராணுவ பலத்தைப் பாவிப்பதற்கு ஐ. நா. அங்கீகாரத்தினை வழங்கும் ஒரு பிரேரணையை இந்த வாரம் பிரேரித்தன,

அமெரிக்க ஆதிக்கத்தின் கீழான 'நேட்டோவும்' ஐரோப்பிய சமூகத்தின் இராணுவ ஆயுதமான மேற்கைரோப்பிய யூனியன் இரண்டும் இராணுவத் தலையீட்டைப் பற்றிக் கலந்துரையாட அவசரக் கூட்டங்களைக் கூட்டின.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செனட்சபையின் ஆயுதப் படைகளின் கமிட்டி முன் சாட்சியமளித்த கூட்டுப்படைத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரால் பரி மக்கப்ரி, பென்டகன் பால்கனில் 60000க்கும் 40000க்கும் இடையிலான படைகளை இருத்துவது பற்றிய திட்டங்களைக் கலந்துரையாடிக் கொண்டுள்ளதாக அம்பலப்படுத்தினார்,

அமெரிக்கத் தொழிலாளர்கள் இரு முதலாளித்துவக் கட்சிகளின் அரசியல்வாதிகளதும் பெரும் வர்த்தக, வெகுஜனத் தொடர்புச் சாதனங்களதும், சரமாரியான பிரச்சாரங்களையும், பொய்களையும், சோவினிசத்தையும் நிராகரிக்க வேண்டும். பால்கனில் யுத்தத்தை முடுக்கிவிடுவதன் பின்னால் உள்ள நிச வர்க்க சக்திகளையும், சட நலன்களையும் புரிந்து கொள்வது அவசியம்,

### முதலாளித்துவ புனருத்தாரணம்

2. நகரங்களில் இடம்பெறும் ஷெல் அடிகளும் 'இனச் சுத்திகரிப்புகளும்', தடுப்பு முகாம்களும், மற்றும் யூகோசலாவிய யுத்தத்துடன் தொடர்புபட்ட ஏனைய பயங்கரங்களும் ஆகாயத்தில் இருந்து விழவில்லை, அவை முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யும், இனக் குழு, தேசிய அடிப்படையில் நாட்டைக் கூறு போடும் முயற்சிகளதும் தவிர்க்க முடியாத பெறுபேறாகும், இவ்விரு போக்குக்களும் தமது சொந்தப் பொருளாதார மூலோபாய நலன்களை அபிவிருத்தி செய்வதற்கான வழிகளாக ஏகாதிபத்திய வாதிகளால் ஆதரவளிக்கப்பட்டுத் தூண்டிவிடப்பட்டுள்ளது.

40 ஆண்டுகளுக்கு மேலாக யூகோசலவியாவில் சேர்பியர்களும், முஸ்லீம்களும், குரோசியர்களும் ஏனைய தேசிய இனங்களும் சமாதானமாக வாழ்ந்தனர். இவர்களை ஒன்றிணைத்த பிணைப்புக்கள் நாசி ஆக்கிரமிப்புக்கும் உள்நாட்டு ஒடுக்குமுறை வர்க்கங்களுக்கும் எதிரான டிட்டோவின் தலைமையிலான யூகோசலவியா கம்யூனிஸ்ட் கட்சியின் 'பாட்டிசன்' போராட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டன.

யுத்தத்தின் பின்னர் இந்தப் பிணைப்புக்கள், நாட்டின் உற்பத்திச் சக்திகளின் பெரும் பகுதி தேசியமயமாக்கப்பட்டதன் மூலமும் பொருளாதாரத் திட்டமிடலின் அறிமுகத்துடனும் பலப்படுத்தப்பட்டன. இந்நடவடிக்கைகள் வரையறுக்கப் பட்டதாயும் டிட்டோ அதிகாரத்துவத்தின் ஸ்டாலினிச 'தனிநாட்டில் சோசலிசம்' முன்னோக்கினால் குழிபறிக்கப்பட்ட போதிம் முன்னொருபோதும் இல்லாத அளவில்வாழ்க்கைத் தரத்தின் உயர்வுக்கும், முக்கியமாக விவசாய நாடான அதன் கைத்தொழில்மயமாக்கத்துக்கும் இட்டுச் சென்றது,

3. இந்த உற்பத்திச் சக்திகளின் தனியார் மயமாக்கமும் பொருளாதாரத் திட்டமிடலின் ஒழிப்பும் சர்வதேச நாணய நிதியத்தினதும், ஏகாதிபத்திய வங்கிகளதும் நேரடிக் கண்காணிப்பின் கீழ் யூகோசலவிய ஸ்டாலினிச அதிகாரத்துவதினால் அமுல் செய்யப்பட்டன. யூகோசலாவியத் தொழிலாளர்களிடையே வளர்ச்சி கண்டு வந்த பெரும் எதிர்ப்புக்கு எதிராகத் தமது சொந்த அதிகாரத்தையும் சலுகைகளையும் பேணும் சாதனமாக இந்த அதிகாரத்துவங்கள் 'சந்தை'யை தழுவிக் கொண்டதோடு, தம்மை முதலாளிகளாகப் பரிணாமம் செய்து கொள்ள முயன்றனர்,

வேகமாக மோசமடைந்து வந்த பொருளாதார நிலைமைகளில் இருந்து யூகோசலவியத் தொழிலாளர்களின் கோபத்தைத் திசை திருப்பும் சாதனமாக ஆளும் அதிகாரத்துவம் தேசிய சோவினிசத்தையும் இன வெறுப்புக்களையும் வேண்டுமென்றே தூண்டிவிட்டது. மேலும் இது சமூகமயமான உற்பத்தியையும் திட்டமிட்ட பொருளாதாரத்தையும் சின்னாபின்னமாக்கியதால் நானாவித தேசிய, இனக் குழுக்களுக்கு இடையேயான ஐக்கியத்துக்கான சட அத்திவாரங்களையும் சிதறடித்தது.

4 பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பால்கன்ஸ் நெருக்கடி, ஏகாதிபத்தியவாதிகளுக்கு இடையேயான உலகளாவிய மோதல்களின் மையமாக விளங்கியதோடு முதலாம் உலக யுத்தமாகவும் வெடித்தது,

காலங்கடந்த முதலாளித்துவ அபிவிருத்தியைக் கொண்ட சகல நாடுகளிலும் போன்று பால்கன்ஸ் தேசிய இயக்கங்கள், சக்தி வாய்ந்த முதலாளித்துவ அரசுகளினால் ஏற்கனவே ஆளுமைக்குள்ளாகி இருந்த ஒரு உலகப் பொருளாதாரத்தின் அடிப்படையிலேயே தோன்றியது. பல்வேறு பால்கன் அரசுகளிலுமான முதலாளி வர்க்கம் தேசிய ஒருங்கிணைப்பையும் அபிவிருத்தியையும் பூர்த்தி செய்ய இலாயக்கற்றதாக விளங்கியது. அரசியல் ரீதியில் மலடாகப் பிறந்து, சோவினிச நாற்றம் கண்டு பரஸ்பரம் அழிவை உண்டுபண்ணும் அதன் தகராறுகள், தமது சொந்த நலன்களை முன்னேற்றிக் கொள்ள முயலும் போட்டி ஏகாதிபத்திய வல்லரசுகளால் வேண்டுமென்றே சாதுரியமாகக் கையாளப்படுவதோடு, தூண்டிவிடவும் படுகின்றன.

முதலாளித்துவத்தைப் புனருத்தாரணம் செய்யும்முயற்சியோடு இதே பிற்போக்கு அரசியல் திட்டம், மிகவும் வெடித்துச் சிதறும் நிலைமையின் கீழ் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

5 50 ஆண்டுகளுக்கு முன்னர் யூகோசலவியாவைக் கைப்பற்றும் தோல்விகண்ட முயற்சியாக 30 இராணுவ டிவிசன்களை அனுப்பிய பிராந்தியத்துக்கு ஜேர்மன் ஏகாதிபத்தியம் கடந்த ஆண்டு ஜூனில் பால்கன்ஸ் மக்களின் சேமநலனில் அக்கறைகொண்டுள்ளதாகக் காட்டிக்கொண்டது, பிரிந்து சென்ற குரோஷிய, சுலோவீனிய குடியரசுகளை அங்கீகரிக்க ஜேர்மன் விரைந்தது. இப்பிராந்தியத்தில் ஜேர்மன் செல்வாக்கினைப் புதுப்பிக்கும் ஒரு வாகனமாக இதைக் கண்ட அமெரிக்கா, அன்று சுதந்திரத்துக்கான முயற்சியை எதிர்த்தது, இந்தக் கட்டத்திலேயே யூகோசலவியாயில் உள்நாட்டு யுத்தத்திற்குத் தீமூட்டப்பட்டது. சேர்ப்சுகளுக்கும் குரோஷியர்களுக்கும் இடையேயான இரத்தம் தோய்ந்த போராட்டமாக முதலில் ஆரம்பமாகியது.

இன்றைய படுகொலைகளுக்கான இறுதிப் பொறுப்பு ஏகாதிபத்தியமே. யூகோசலவியாவைத் துண்டாடுவதற்கான ஆதரவை அவர்கள் வழங்கிய சமயத்தில் இதன் பெறுபேறாக ஒரு இனவாத இரத்தக்களரி ஏற்படும் என்பதை நன்கு அறிந்திருந்தனர்,

தென் சுலேவிய மக்கள் ஐக்கியப்பட்டு இருக்கும் வரையில் பல்வேறு இனங்களுக்கு இடையே சமாதானத்துக்கும் சமத்துவமான உரிமைக்கும் ஓரளவில் உத்தரவாதம் இருந்து வந்தது. நாடு வேறாகத் துண்டாடப்பட்டதும் குரோஷியாவிலும் பொஸ்னியாவிலும் இருந்துவந்த பெரும் கணிசமான அளவு சேர்பியர்கள் திடீரென தமது சொந்த நாட்டிலேயே சேர்பியருக்கு எதிரான சோவினிசத்தை அப்பட்டமாக வளர்த்து வந்த ஆட்சியாளர்களால் அந்நிய சிறுபான்மையினர் ஆக்கப்பட்டனர். ஒரு கசப்பான மோதுதலுக்கான நிலைமைகள் சிருஷ்டிக்கப்பட்டன.

சகல புறங்களில் இருந்தும் இனவாத வெறுப்பைத் தூண்டிவரும் மாஜி — ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும், குட்டி முதலாளித்துவ தேசியவாத வாய்வீச்சுக்காரர்களும் இறுதி ஆய்வுகளின்படி ஒவ்வொரு ஏகாதிபத்திய வல்லரசுகளாலும் ஊக்குவிக்கப்படும் முதலாளித்துவப் புனருத்தாரண, தேசிய பிரிவினைக் கொள்கைகளை அமுல் செய்வதில் கனிஷ்ட பங்காளிகளாக உள்ளனர்.

### அட்டூழியங்கள்

6 யூகோசலவியாவில் சேர்பியர்களின் அட்டூழியங்களை மையமாகக் கொண்டு ஒரு முழு அளவிலான பிரச்சார இயக்கத்தினை நடாத்துவதன் மூலம் இராணுவத்தலையீட்டுக்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. தொழிலாளர்களும், பகுத்தாயும் சிந்தனைக்கான வல்லமையை இழந்துவிடாத மத்தியதர வர்க்கத்தின் பிரிவினரும் பால்கன்ஸ் இரத்தக்களரி பற்றிய தலைப்புச் செய்திகள், தொலைக்காட்சி அறிக்கைகளால் தாம் அடித்துச் செல்லப்பட இடமளிக்கவே கூடாது.

இராணுவத் தலையீட்டுக்கான அவசரத்தில் முதலாளித்துவப் பிரதிநிதிகள் யூகோசலவியாவில் நடவடிக்கையில் இறங்குதற்கு 'பொதுஜன அபிப்பிராயத்தையும்'. 'வெகுஜன நெருக்குவாரத்தையும் சுட்டிக்காட்டி வருகின்றனர், இது ஒரு அப்பட்டமான மோசடியாகும், தலையீட்டுக்கான முடிவுகள் ஆளும் வர்க்கத்தின் மிகவும் பலம்வாய்ந்த பிரிவினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் சிறு கும்பல்களாலேயே எடுக்கப்பட்டு வருகின்றது.

வர்க்க நனவு கொண்ட தொழிலாளி பொஸ்னிய மக்களின் அளப்பரிய துயரங்களையிட்டு அலட்சியமாக இருக்க முடியாது. ஆனால் அவர்கள் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் சுயநலமும், கபடமும் நிறைந்த மோசடிகளைப் புறக்கணித்துவிட முடியாது, மோதுதலின் சகல பக்கங்களில் இருந்தும் அட்டூழியங்கள் இடம்பெற்றுள்ளது; அவை யூகோசலவியாவைத் தனித்தனி தேசிய குழுக்களாகப் பிரிக்கும் ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற முயற்சியின் தவிர்க்க முடியாத துணை விளைவாகும்,

எங்கெல்லாம் ஏகாதிபத்தியவாதிகளால் தூண்டிவிடப்பட்ட தேசியப் பிளவுகள் உள்நாட்டுப் போர்களாக வெடித்தனவோ அங்கெல்லாம் அத்தகைய அட்டூழியங்கள் இடம்பெற்றுள்ளன. பெரிதும் இரத்தம் தோய்ந்த படுகொலைகளும் தடுப்புக் காவல்களும், பரந்த அளவிலான வெளியேற்றங்களும் இந்தியத் துணைக் கண்டத்தில் பிரித்தானியரால் சிருஷ்டிக்கப்பட்ட கருச்சிதைவையும், நைஜீரியாவிலான பயப்ரா பிரிவினை இயக்கத்தையும், ஆபிரிக்க முனையைச் சிதைத்த நீண்ட உள்நாட்டு யுத்தங்களையும் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு ஏகாதிபத்திய தலைநகரிலும் சேர்பியன் அட்டூழியங்களைத் தொடர்ந்து ஒலிக்கும் திரிபு செய்யப்பட்டதும், பெரிதும் பொறுக்கி எடுக்கப்பட்டதுமான கொடுமைகளின் பின்னணி என்ன?

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிச வேட்பாளர்களுக்கு ஆதரவளியுங்கள்



## ஜனாதிபதி பதவிக்கு - ஹெலன் ஹெல்யாட்

**தொழில், வீடு, கல்வி உரிமைகளுக்கு**
**லேபர் கட்சியை கட்டியெழுப்பு!**
**தொழிலாளர் அரசாங்கம், சோசலிச கொள்கைகளுக்கு**
**உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!**

## உப-ஜனாதிபதி பதவிக்கு-பிரெட் மாசெல்ஸ்



1992 லேபர் தினத்தில், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் தோழமைபூண்ட அமெரிக்க ட்ரொட்ஸ்கிச வேர்க்கஸ் லீக் ,1992 ஜனாதிபதி தேர்தலிற்காக வெளியிட்ட விஞ்ஞாபனம்

வேர்க்கஸ் லீக் 1992 தேர்தலில் அதன் வேட்பாளர்களை — ஜனாதிபதி — ஹெலன் ஹெல்யாட், உப—ஜனாதிபதி — பிரட் மாசெல்ஸ் —ஆதரிக்குமாறு தொழிலாளர்கள், இளைஞர்கள், வேலையற்றோர் அனைவரையும் வேண்டுகின்றது. பெரும் வர்த்தக நிறுவனங்களும் அதன் இரு கட்சிகளான குடியரசு, ஜனநாயகக் கட்சிகளும் தொழில், வாழ்க்கைத் தரம், ஜனநாயக உரிமைகளின் மீது தொடுத்துவரும் தாக்குதலுக்கு எதிராக ஒரு சோசலிச வேலைத்திட்டத்தினை முன்வைப்பதன் மூலம் தொழிலாளி வர்க்கத்துக்காகப் போராடி வரும் ஒரே கட்சி வேர்க்கஸ் லீக் மட்டுமே,

மிச்சிக்கன் மாநிலத்தில் வேர்க்கஸ் லீக் நான்கு காங்கிரஸ் மாவட்டங்களிலும் தேர்தலுக்கு நிற்கின்றது. 9வது மாவட்டத்தில் ஜெரோம் வைட்டும், 13வது மாவட்டத்தில் லரி றொபேட்சும், 14வது மாவட்டத்தில் டீ ஆட்டக்நன் கோரியரும், 16வது மாவட்டத்தில் மார்டின் மக்லக்லினும் வேட்பாளர்களாக நிற்கின்றார்கள். பென்சில்வேனியாவில் போல்ஜெரார் 14வது மாவட்டத்தில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுகின்றார்.

இலட்சோப இலட்சம் மக்களின் வாழ்க்கையை நாசமாக்கும் சமூக நெருக்கடிக்கு ஜோர்ஜ் புஷ்சிடமோ அல்லது பில் கிளின்டனிடமோ எதுவித தீர்வும் கிடையாது, 1930 பதுகளின் பின்னர் உலகம் கண்டிராத ஒரு பொருளாதார மந்தத்தின் பிடியில் அமெரிக்காவும், உலகமும் அகப்பட்டுள்ளன, இந்த வேட்பாளர்களில் எவருமே பரந்த வேலையின்மை, வறுமையின் நாசங்களில் இருந்து விடுதலை செய்வதற்கான மிகக் குறைந்தபட்ச சீர்திருத்தங்களைத் தன்னும் பிரேரிப்பதாய் இல்லை.

சகல பெரும் வர்த்தக நிறுவனங்களின் பகடைக்காய்களைப் போலவே இவர்களும் முதலாளித்துவ அமைப்பின் தலன்களுக்கு ஈவிரக்கமின்றிச் சேவை செய்கின்றனர். இது உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களின் மனிதத் தேவைகளை அமெரிக்காவின் நிச ஆட்சியாளர்களாக விளங்கும் இலட்சாதிபதிகளினதும் கோடீஸ்வரர்களினதும் இலாபப் பேராசைக்குப் பலி கொடுக்கின்றது.

## சோசலிசப் பதிலீடு

வேர்க்கஸ் லீக் வேட்பாளர்கள் மட்டுமே ஒரு பதிலீட்டை முன்வைக்கின்றார்கள், நாம் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு புதிய, புரட்சிகர அரசியல் இயக்கத்தினை ஆரம்பிக்கவே இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். எமது பிரச்சார இயக்கம், ஒரு தொழிற் கட்சியை (Labor Party) நிர்மாணிப்பதற்கான அத்திவாரத்தை இடுகின்றது. அது இலாபத்தின் அடிப்படையில் அன்றி மனிதத் தேவைகளின் அடிப்படையில் பொருளாதார வாழ்க்கையை மறுசீரமைக்கும் ஒரு நிச தொழிலாளர் அரசாங்கத்தை அமைப்பதற்கான தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் உள்ளார்ந்த சக்தியை அணிதிரட்டும்.

இந்தப் போராட்டத்தினை முன்னெடுக்கையில் வேர்க்கஸ் லீக், அமெரிக்காவின் உள்ளும் உலகம் பூராவும் சகல தொழிலாளர்களதும் ஐக்கியத்துக்காகப் போராடுகின்றது. நாம் ஜனநாயக, குடியரக் கட்சிகளின் சோவினிசத்தையும், இனவாதத்தினையும் நிராகரிக்கின்றோம். வர்க்கப் போராட்டம் உலகம் பூராவும் மூர்க்கமாக இடம்பெற்று வருகின்றது, சகல தேசிய இனங்களையும் இனக் குழுக்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஒரே எதிரிக்கே முகம் கொடுக்கின்றனர். ஒரே பகுதியிலேயே உள்ளனர். ஒரு தொழிலாளி வெள்ளையரோ, கறுப்பரோ அல்லது ஹிஸ்பானியரோ அமெரிக்கரோ, மெக்ஸிக்கரோ, ஐரோப்பியரோ, அல்லது ஆசியரோ, ஆணோ அல்லது பெண்ணோ—சாத்தியமான மாபெரும் இலாபத்துக்காக உலகைத் தேடி அலையும் பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்களின் காட்டுமிராண்டிச் சுரண்டலுக்குப் பலியாகி உள்ளனர்,

இரத்தம் தோய்ந்த இந்த நூற்றாண்டு பூராவும் இரண்டு உலக யுத்தங்களிலும் எண்ணற்ற 'சிறிய' யுத்தங்களிலும் முதலாளித்துவம் தொழிலாள வர்க்க இளைஞர்களை பீரங்கிக் குண்டுகளாக மாற்றியுள்ளது, ஒருதொகை புதிய இரக்கமற்ற படுகொலைகளுக்குத் தயாரிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ''சந்தைகளுக்கான'' போராட்டத்தின்'' தவிர்க்கமுடியாத விளைவான வர்த்தக யுத்தங்களுக்கும் துப்பாக்கி யுத்தங்களுக்குமான பதில், சமாதானத்துக்கும் சோசலிசத்துக்குமான அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றிணைந்த போராட்டமே. வேர்க்கஸ் லீக்கினதும் அதன் வேட்பாளர்களதும் பதில் இதுவே,

## எமது வேட்பாளர்

வேர்க்கஸ் லீக்கின் வேட்பாளர்கள் எமது கட்சியின் வேலைத் திட்டத்தையும் கொள்கைகளையும் முன்மாதிரியாகக் கொண்டுள்ளனர். ஹெலன் ஹெல்யாட், பிரெட் மார்செல்ஸ் இருவரும் தமது முழுவாழ்கையையும் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்களுக்கு அர்ப்பணம் செய்துள்ளார்கள், எமது ஜனாதிபதி வேட்பாளரான 41வயது ஹெலன் ஹெல்யாட், வேர்க்கஸ் லீக்கின் உதவிச் செயலாளர், நியூயோக் நகரில் பிறந்து வளர்ந்தவர், கடந்த 11 வருடங்களாக டெட்ரொயிட்டில் வசித்துவரும் அவர், பக்டரி மூடுவிழாக்கள், பாடசாலை மூடுவிழாக்கள், வரவு-செலவுத் திட்ட வெட்டுக்கள், பரந்தளவிலான குடியிருப்பாளர்கள் அப்புறப்படுத்தல்களுககும் எதிரான வேர்க்கஸ் லீக்கின் பிரச்சாரங்களுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

எமது உப ஜனாதிபதி வேட்பாளரான 51 வயது பிரெட் மாசெல்ஸ் 1966ல் வேர்க்கஸ் லீக்கினை ஸ்தாபிப்பதில் பங்கு கொண்டவர். நியூயோக் நகர வாசியான அவரின் சோசலிச இயக்கத்தின் உள்ளான செயற்பாடுகள் 1958ல் ஆரம்பமாகின. இன்று மாசெல்ஸ் அனைத்துலக தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டியின் பிரச்சார இயக்கத்தில ஒரு முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றார். இககமிட்டி பழிவாங்கப்பட்ட கிறே கவுண்ட் வேலைநிறுததக்காரரான றொஜர் கவுத்ரா போனற வர்க்க யுத்தத்தின் கைதிகளைப் பேண நிறுவப்பட்டது,

## பொய்களின் தேர்தல்

வேர்க்கஸ் லீக் பின்வரும் எச்சரிக்கையை விடுக்கின்றது: நவம்பர் தேர்தலின் பினனர் அடுத்த ஜனாதிபதியாக புஷ் வந்தாலும் சரி கிளின்டன் வந்தாலும் சரி தொழிலாளி வர்க்கத்தின மேல் முன்னொரு போதும் இலலாத அளவிலான தாக்குதல் கட்டவிழ்க்கப்படும். தேர்தல்கள் ஒரு பொய்யையே அடிப்படையாகக் கொண்டுள்ளன, எந்தவொரு வேட்பாளரும் இந்த நெருக்கடியின் விஸ்தீரணத்தைப் பற்றியும் நவம்பர் 3ன் பின்னர் உண்மையில் தாம் செய்ய உத்தேசித்துள்ளது என்ன என்பது பற்றியும் மக்களுக்கு கூற அஞ்சுகின்றனர். புஷ்சும் கிளின்டனும் ''அமெரிக்க மக்களை'' பிரதிநிதித்துவம் செய்யவில்லை, அவர்கள் வோல் ஸ்ரீட் வங்கியாளர்கள் கூட்டு கம்பனிகளின் சொந்தக்காரர் சார்பில் பேசுகின்றனர், தொழிலாளி வர்க்கம், அமெரிக்க முதலாளித்துவத்தின வங்குரோத்துக்கு பலியாக வேண்டும் என்பதில் இருவரும் உடன்பாடு கண்டுள்ளனர்.

அவர்களின் கொள்கைகள் போலி தேர்தல் வாக்குறுதிகளினால் அன்றி அமெரிக்க முதலாளித்துவத்தின் உலக அந்தஸ்தின் செங்குத்தான வீழ்ச்சியி
லகப் பொருளாதார நெருக்கடியினா
படும்.

தேர்தல் காலத்தில் வோல்ஸ்ரீட்,
த்துவம் பற்றிய ஒரு கடுகடுப்பான ய
த்த ஜனாதிபதிக்குச் சமர்ப்பிப்பது
பிரமாண்டமான வரவு-செலவுத் தி
த்தகப் பற்றாக்குறைகள், பூகோள
வொரு நாட்டின் ... பெரும்
கம்பனிகளின் வங்குரோ...
களின் வீழ்ச்சி, டாலா மீதான
நாட்டின் கைத்தொழில் தரத்தின் நா

புஷ் திரும்பத் தெரிவு செய்யப்படு
நெருக்கடியை எவரும் முன்னறிந்
எனத் திடீரென அறிவிப்பார். கிளின்ட
பட்டால் நெருக்கடி அவர் எதிர்பா
மடைந்துள்ளது எனப் பயபக்தியுடன்
அதைத் தொடர்ந்து வெள்ளை மா
கையாள ஹரிகேன் அண்ட்ருவின்
டிக்கைகளுக்குச் சமானமான ஒரு '
திட்டத்தை' அறிவிக்கும்.

சமூகப் பாதுகாப்பு, வைத்திய ப
உதவி வேலைத்திட்டங்கள் வெட்டிச்
சோப இலட்சம் தொழிலாளர்களும்
ஓய்வுபெற்றோரும் தமது வைத்திய
லூதிய வேலைத் திட்டங்களும் உதவா
பதைக் காண்பர். ...ட்டி வீதங்களின்
பானது ...ங்குரோ...க்களையும்
யும் சிருஷ்டிக்கும், ...வலையி...ாத்
கனவே அடைந்துள்ள பேரழிவு மட்ட
அரசாங்கமும், பெரும் வர்த்தக நிறு
ள்ள தொழிற்சங்கங்களின் மீது தமது
மாக்கும்.

உள்நாட்டு நெருக்கடியில் இருந்து
திருப்பவும், பெரும் வர்த்தக நிறுவன
ளைப் பற்றி வாயடிக்கவும் வெள்
காங்கிரசும் யூகோசலவியாவை,
டாவை அல்லது அமெரிக்க முதலாளி
நலனகள் பாதிக்கப்பட்ட எந்தவொ
இலக்காகக் கொண்டு அதிகளவிலான
களில் ஈடுபடும்.

தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுப
த்தும் பொருட்டு கறுப்பு இனத்தவர்களு
களுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் எ
தையும் சோவினிசத்தையும் தூண்டிவி
பதுடன் ஆளும் வர்க்கத்தின் பொருள
தும் யுத்தத்தினதும் கொள்கைகள் 
அரசியல் முரண்பாட்டாளரும்,
ரும், ஓரின பால் சேர்க்கைகாரர்களும்
இயக்கங்களை ஊக்குவிக்கும் படி நெரு

தேர்தலின் பின்னைய வேலைத்தி
ரும் வர்த்தக நிறுவனங்கள் அம்பலப்ப
னரே இலட்சோப இலட்சம் தொழிலா
கக் குடும்பங்கள் ஒரு சமூக நெருக்கடியி
செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் உலக
னர் இதற்குச் சமானமான நெருக்கடி
தினமும் அரசியல்வாதிகளும் வெகுஜன
னங்களும் முதலாளித்துவத்தைப் ப
வர்த்தக' அமைப்பு பற்றியும் புகழ்பாடு
வரலாறு முதலாளித்துவம் இந்நாட்ட
ஆதாளபாதாளத்தில் வீழ்த்தி உள்ளது 
படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ங்கள்! - வேர்க்கஸ் லீக்குக்கு வாக்களியுங்கள்!



பூண்ட
ஞாபனம்

ந்தான வீழ்ச்சியினாலும் அனைத்து
நெருக்கடியினாலுமே உத்தரவிடப்

ல் வோல்ஸ்ரீட், அமெரிக்க முதலாளி
கடுகடுப்பான யதார்த்தத்தினை அடு
ச் சமர்ப்பிப்பதுண்டு: ஆதரவற்ற
வு-செலவுத் திட்டச் சுமைகள், வர்
கள், பூகோளத்தில் உள்ள எந்த
பெரும் ...ிநாட்டுக் கடன்கள்,
ர... ...மையின் பெருக்கம், வங்கி
லா மீதான ஓட்டத்தின் ஆபத்து
ல் தரத்தின் நாசகரமான வீழ்ச்சி,

ரிவு செய்யப்படுமிடத்து அவர் ''இந்த
ம் முன்னறிந்திருக்க முடியாது''
ிப்பார். கிளின்டன் தெரிவு செய்யப்
அவர் எதிர்பார்த்ததை விட மோச
பயபக்தியுடன் பிரகடனம் செய்வார்.
வெள்ளை மாளிகை நெருக்கடியை
அண்ட்ருவின் பொருளாதார நடவ
னமான ஒரு 'அவசரகால வேலைத்
கும்.

பு, வைத்திய பராமரிப்பு, வைத்திய
ங்கள் வெட்டிச் சரிக்கப்படும். இலட்
ாழிலாளர்களும் சேவையில் இருந்து
தமது வைத்திய காப்புறுதியும் ஓய்
ங்களும் உதவாக்கரையானது என்
டி வீதங்களி... பெருமளவு அதிகரிப்
க்களையும் ...ரி மூடுவிழாக்களை
வலையி...ாத் திண்டாட்டம் ஏற்
பேரழிவு மட்டத்தினை தாண்டும்.
ம் வர்த்தக நிறுவனங்களும் எஞ்சியு
ளின் மீது தமது தாக்குதலை உக்கிர

க்கடியில் இருந்து கவனத்தைத் திசை
வர்த்தக நிறுவனங்களின் இலாபங்க
டிக்கவும் வெள்ளை மாளிகையும்
சலவியாவை, பாரசீக வளைகு
மரிக்க முதலாளித்துவத்தின் இலாப
பட்ட எந்தவொரு இடத்தையும்,
அதிகளவிலான இராணுவ சாகஜங்

கத்தைப் பிளவுபடுத்தி பலவீனப்படு
பு இனத்தவர்களுக்கும் ஹிஸ்பானியர்
டவர்களுக்கும் எதிராக இனவாதத்
தையும் தூண்டிவிட அழைப்பு விடுப்
கத்தின் பொருளாதார மந்தத்தின
கொள்கைகள் சேர்ந்து கொள்ளும்.
ாட்டாளரும், சிறுபான்மையின
க்கைகாரர்களும் பிற்போக்கு பாசிச
விக்கும் படி நெருக்கப்படுவர்.

னைய வேலைத்திட்டத்தினைப் பெ
ங்கள் அம்பலப்படுத்துவதற்கு முன்
லட்சம் தொழிலாள, மத்தியதர வர்க்
சமூக நெருக்கடியினால் கதிகலங்கச்
இரண்டாம் உலக யுத்தத்தின் பின்
மான நெருக்கடி இருந்ததில்லை.
திகளும் வெகுஜனத் தொடர்புச் சாத
த்துவத்தைப் பற்றியும் 'சுதந்திர
ற்றியும் புகழ்பாடுகின்றன. ஆனால்
துவம் இந்நாட்டினை எத்தகைய
வீழ்த்தி உள்ளது என்பதை அம்பலப்

## பரந்த வேலையின்மை

கடந்த தசாப்தத்தில் 100 இலட்சம் தொழிலாளர்களின் தொழில்கள் நாசமாக்கப்பட்டுள்ளன, இதில் உருக்குக் கைத்தொழிலைச் சேர்ந்த 500,000, மோட்டார் கைத் தொழிலைச்சேர்ந்த 300,000, தொலைத்தொடர்பு வேலையைச் சேர்ந்த 200,000, நிலக்கரிச் சுரங்கத்தைச் சேர்ந்த 100,000 தொழிலாளரும் அடங்குவர், கடந்த ஆகஸ்டில் அமெரிக்க வர்த்தக நிறுவனங்கள் தினசரி 8000 தொழில்களைத் துடைத்துக் கட்டினர் உத்தியோக பூர்வமான வேலையில்லாத் திண்டாட்டப் புள்ளிவிபரம் 100 இலட்சம். உண்மை புள்ளி விபரம்—தொழில் தேடுவதைக் கைவிட்டுள்ளவர்கள், பகுதிநேர தொழில் செய்ய நெருக்கப்பட்டுள்ளோருமான இலட்சோப இலட்சம் உட்பட — இதைவிட இருமடங்காகும்.

## வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சி

ஒரு வேலை செய்யும் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் தமது சம்பளத்தின் கொள்வனவுச் சக்தி அரிக்கப்படுவதைக் காண்கின்றனர். நிஜ சம்பளம் 1965 மட்டத்திற்கு வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் மத்தியதரக் குடியிருப்பாளர் வருமானம் 1077 டாலரால் வீழ்ச்சி அடைந்துள்ளது, தாயும் தகப்பனும் வேலைசெய்தாலும்கூட — ஒரு இரண்டாவது அல்லது மூன்றாவது தொழிலில் அடிமைபோல் உழைத்தாலும்கூட—உயிரைப் பிடித்து வைப்பது ஒரு தினசரிப் போராட்டம் ஆகிவிட்டது. ஆரம்ப மட்டத் தொழில்களில் சம்பளம் 1979ஐவிட 26% குறைவாகவே சம்பளம் வழங்கப்படுகின்றது, முழு நேரமும், ஆண்டு முழுவதும் உழைக்கும் இளம் தொழிலாளர்களில் 40% த்தினர் உத்தியோகபூர்வமான வறுமை வீதத்துக்கு குறைவாகவே உழைக்கின்றனர். சம்பளத்தின் வீழ்ச்சி அவ்வளவுக்கு ஆழம் கண்டுள்ளதால் அமெரிக்கத் தொழிலாளர்களின் சம்பளம் உலகில் பதின்மூன்றாம் இடத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

## வறுமை, வீடின்மை, பட்டினி, நோய்

1930பதுகளின் மாபெரும் பொருளாதார மந்தத்தின் பின்னர் கண்டிராத மட்டத்திற்கு அமெரிக்காவில் வறுமை வளர்ச்சி கண்டுள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை, இரண்டாவது நேர்கோட்டு வருடமாக 1991ல் .00 இலட்சத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது. ஏறக்குறைய ஆறுபேரில் ஒருவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். 1980பதுகளில் குழந்தைகள் இடையேயான வறுமை உக்கிரம் கண்டுள்ளது. அத்லாந்தா, டெட்ரொய்ட், மியாமி ஹாட்போட் போன்ற நகரங்களில் 50%,மான குழந்தைகள் ஏழைகளாக உள்ளனர்.




டெட்ரொயட் மேதல ஊர்வலத்தில பிரச்சாரத்தில ஈடுபட்டுள்ள ஹெலன் ஹெலயாட்

முதியோரில் ஐந்து பேரில் ஒருவர் ஏழை, 40 இலட்சம் மக்கள் வீடற்றோராகவும், 430 இலட்சம் அமெரிக்கர்கள் — அரைப்பங்கினர் குழந்தைகள் — சுகாதாரக் கண்காணிப்புக் காப்புறுதி இல்லாதவர்களாயும் உள்ளனர்,

வறுமையால் உண்டான சமூக கொள்ளை நோய்கள் —குழந்தை மரணங்கள் அதிகரித்து வருகின்றன, 10 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாக நம்பப்பட்டதும் வறுமையுடன் தொடர்புபட்டதுமான காசநோய் போன்றவை பயங்கரமான முறையில் தலைநீட்டியுள்ளன. வீடின்மை, வறுமையுடன் தொடர்புபட்ட புதிய நோயான 'எயிட்ஸ்' போன்றவையும், போதைப் பொருட்கள், விபச்சாரம் போன்ற சமூகப் பிரச்சினைகளும் பெருமளவில் பரவிவருகின்றன.

தொழிலாளி வர்க்க இளைஞர்களின் கல்வி உரிமை, பாடசாலை மூடுவிழாக்களாலும் வரவு-செலவுத் திட்ட வெட்டுக்களாலும் நாசமாக்கப்பட்டுள்ளது. நாடு பூராவும் தொழிலாளி வர்க்கச் சமூகங்களில் இளைஞர்கள் நெருக்கடியான வகுப்பறைகள், காலவதியான பாடப்புத்தகங்கள், பழையதும் பற்றாக்குறையானதுமான போதனைக் கருவிகள், சங்கீத கலைத்துறை கல்வி போதனை பாடத்திட்டத்துக்குப் புறம்பான வேலைத்திட்டங்கள். விளையாட்டுக்கள் ஒழிப்பு என்பனவற்றுக்கு முகம் கொடுக்கின்றனர், இதன் பெறுபேறுகளை முன் அனுமானிக்கலாம், சிரேஷ்ட பாடசாலைகளில் மூன்றிலொரு பங்கினர் பட்டம் பெறுவதற்கு முன்னரே பாடசாலைகளை விட்டு விலகி விடுகின்றனர். படிப்பறிவின்மை வீதம் உயர்கையில் பரீட்சைப் புள்ளிகள் வீழ்ச்சியடைகின்றன,

'டியூசன்' அதிகரித்துள்ளது, நிதி உதவி வெட்டு, கல்லூரிக் கல்வியை இலட்சோப இலட்சம் இளைஞர்கள் எட்டியும் பிடிக்க முடியாததாக்கி விட்டது. கல்லூரிகளில் உள்ள கறுப்பு இன இளைஞர்களைக் காட்டிலும் சிறைகளிலுள்ள கறுப்பு இன இளைஞர்கள் அதிகம்,

பொதுக்கல்வி மீதான தாக்குதலுடன் சேர்ந்து ஆளும் வர்க்கம் இந்நூற்றாண்டின் திருப்பத்தில் இருந்து குழந்தை ஊழியத்தின கொலைகார நடைமுறையைப் புதிய மட்டத்துக்கு புத்துயிர் பெறச் செய்துள்ளது, அமெரிக்காவில் இன்று 20 இலட்சம் குழந்தைகள் சட்ட விரோதமாக வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர், இது ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இருந்ததைவிட மூன்று மடங்காகும். வயது வாரத பல நூற்றுக்கணக்கானோர் சட்ட விரோதமான கடுழிய கடைகளிலும், 'பாஸ்ட் பூட்ஸ்' நிலையங்களிலும் பேரளவு பயிர்ச்செய்கைப் பண்ணைகளிலும் ஆண்டுதோறும் கொலை செய்யப்படுகின்றனர், இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாகவும், முடமாகவும் உள்ளனர்.

## ஜனநாயக, தொழிற் சங்க உரிமை மீதான தாக்குதல்

கடந்த தசாப்தம், தொழிலாளி வர்க்க ஜனநாயக உரிமைகள் மீதான ஓயாத தாக்குதலைக் கண்டுள்ளது, அரசாங்க ஆதரவு பெற்ற தொழிற்சங்கத் தகர்ப்புக்கள் தொழிலாளருக்கு எதிரான பொய் வழக்குகள், வேலை நிறுத்தக்காரர்களை முடமாக்குதல் அல்லது கொலை செய்தல் திரும்பவும் பெரும் வர்த்தகக் கம்பனிகளின் தொழில் ஆகியுள்ளது. 1981ல் 'பற்கோ' விமான போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்களை நொருக்கியதில் இருந்து தொழிலாளர் இயக்கத்திற்கு எதிரான யுத்தம் முதலாளித்துவக் கட்சிகளாலும், அரசாங்கத்தின் ஒவ்வொரு தரத்தினாலும் அமுல் செய்யப்பட்டது.

மேற்கு வேர்ஜீனியா சுரங்கத் தொழிலாளி ஜோன் மக்கோய் கலிபோர்ணியா கிரேகவுண்ட் பஸ் சாரதி றொபேட் வாட்டர்ஹவுஸ் போன்ற வேலைநிறுத்தக்காரர்களை கொலை செய்ய கம்பனி ஆதரவு பெற்ற கொலையாளிகள் சுதந்திரமாக இயங்கும் எல்லையை இது எட்டியுள்ளது. நூற்றுக்கணக்கில் இல்லாது விடினும் பல டசின் கணக்கான தொழிலாளர்கள் பொய் தொழில் வழக்குகளுக்குப் பலியாகச் சிறைகளில் வாடுகின்றார்கள். இப்பட்டியலில் நான்கு கென்டக்கி ஏ. ரீ, மசி சுரங்கத் தொழிலாளர்கள், மேற்கு வேர்ஜீனியா மிலபேர்ள் சுரங்கத்தைச் சேர்ந்த 4தொழிலாளர்கள் அடங்குவர். பொய் வழக்குகளுக்குப் பலியான கிறேகவுண்ட் வேலைநிறுத்தக்காரர் றொஜர் கவுத்ரா 6 ஆண்டுகளுக்கு மேலான சிறைத்தண்டனைக்கு முகம் கொடுக்கின்றார்,

தொழிற்சங்கங்களுக்கு எதிரான தாக்குதல்களுடன் சேர்ந்து சிவில் உரிமை இயக்கங்களின் வெற்றிகளுக்கு எதிராக ஒரு திட்டமிட்ட தாக்குதல் இடம்பெற்றதோடு, அரசியலமைப்புச் சட்டரீதியில் உத்தரவாதம் செய்யப்பட்ட சிவில் சுதந்திரங்களும் சிதைக்கப்பட்டு வருகின்றது உயர் நீதிமன்றம் இந்தப் பிற்போக்கின் மையமாக உள்ளது, இனவாத அநீதிகளை நியாயப்படுத்துகின்றது, கருச்சிதைவு செய்துகொள்ளும் பெண்களின் உரிமையைத் தாக்குகின்றது. அரச படுகொலைகளுக்குப் பச்சை விளக்குக் காட்டுகின்றது.


(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சோசலிச வேட்பாளருக்கு...



ஜெரி வெட்
மாவட்டம் -9
பிளின்ட், பெண்டியாக்,
லாபியர்



லரி றொபேட்ஸ்
மாவட்டம் - 13
ஆபர், இப்சிலன்ட்
மேற்குவேன்பிராந்தியம்



டி ஆர்டக்னன் கோலியர்
மாவட்டம் - 14
டெட்ரொய்ட்
வடகிழக்கு, வடமேற்கு

(5ம் பக்கத் தொடர்ச்சி)

றொட்னி கிங் பொலிசாரால் தாக்கப்பட்டமையும், நான்கு பொலிசார் விடுதலை செய்யப்பட்டமையும், கலவரத்தைத் தொடர்ந்து லொஸ்ஏஞ்சலை இராணுவம் ஆக்கிரமித்தமையும் ஜனநாயகம் எனப்படும் மூடுதிரையின் பின்னணியில் அமெரிக்க ஆளும் வர்க்கம் பரந்தளவிலான அடக்குமுறைக்கும் பொலிஸ் — இராணுவ வடிவிலான ஆட்சிக்கும் தயார் செய்து வருவதைக் காட்டுகின்றது,

## பணக்காரரின் சர்வாதிகாரம்

'சுதந்திரம்', 'சமத்துவம்' பற்றிய விடுமுறை பேச்சுக்களின் பின்னணியில் அமெரிக்க சமுதாயம், பரந்தளவிலான உழைக்கும் மக்களின் மேல் பணக்காரரின் ஒரு சர்வாதிகாரத்தினைக் கொண்டுள்ளது. 1980பதுகளில் இலட்சோப இலட்சம் மக்கள் ஏழைகளின் வரிசையில் சேர்ந்து கொண்டுள்ள வேளையில், அத் தசாப்தம் றோமானிய முடியரசின் ஆட்சிக் காலத்தின் நாட்களை எட்டிப்பிடிக்க ஆளும் வர்க்கம் போட்டியிட்டதைக் கண்டது,

பணக்காரர் தமது சொந்த வரி வீதங்களை வெட்டிக் குறைத்தனர். சமூக சேமநல திட்டங்களை வெட்டினர், தொழிலாளி வர்க்கத்தின் நேரடி இழப்புக்களின் பேரில் தமது அதிஸ்டங்களை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு வட்டி வீதங்களைக் கூட்டினர், சனத்தொகையின் ஒரு வீதத்தினரான பணக்காரர், கீழ் மட்டத்தில் உள்ள 90%த்தினரைக் காட்டிலும் கூடுதலான சொத்தைக் கட்டுப்படுத்தினர், 10 ஆண்டுகளுள் இச் சிறிய கும்பல் சரக்குகள், பண முறிகள், மெய் சொத்துக்கள், மற்றும் வர்த்தகச் சொத்துக்களிலான தமது பங்கினை 20%ல் இருந்து 36·3%க்கு அதிகரித்து.

கம்பனிகளின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் 294%ஆல் அதிகரித்தது, இதே சமயம் தொழிலாளர்களின் கிழமை உழைப்புக்கள் 15%ஆல் வீழ்ச்சி கண்டது, கடந்த ஆண்டு எச். கே. ஹெயின்சின் தலைவர் ஒரு கிழமைக்கு 1,422,000 டாலர்கள் உழைத்தார், இது ஒரு சராசரி அமெரிக்கத் தொழிலாளியின் கிழமைச் சம்பளத்தைக் காட்டிலும் 4000மடங்கு அதிகமாகும்,

## முதலாளித்துவம் பொய்த்து விட்டது

புஷ்சும், கிளின்டனும் 'சந்தை'யின் அதிசயங்களை வரவேற்கையில் 'வேர்க்கஸ் லீக்' வேட்பாளர்கள் மட்டுமே தொழிலாளர்களுக்கு உண்மை சொல்கின்றனர்: முதலாளித்துவ அமைப்பு பொய்த்துவிட்டது.

தொழில், கல்வி, சுகாதாரம், கண்ணியமான வீடமைப்பு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வது மேலதிகமானவை அன்று. அவை அனைவருக்கும் அடிப்படை உரிமைகளாக உத்தரவாதம் செய்யப்பட வேண்டும், ஆனால் இலாப அமைப்பின் கீழ் முதலாளித்துவ அரசியல்வாதிகள் இந்த நாளாந்த தேவைகளுக்கு 'பணம் இல்லை' எனக் கூறிக் கொள்கின்றனர்.

இது முழுப் பொய். மனிதனின் உற்பத்தி இயலளபு இன்றுபோல் முன்னொருபோதும் சக்திவாய்ந்ததாய் இருந்ததில்லை, விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலுமான புரட்சிகர அபிவிருத்திகள், அமெரிக்காவில் மட்டுமன்றி முழு உலகத்திலும் ஒரு சுவர்க்கத்தைச் சிருஷ்டிப்பதை சாத்தியமாக்கும் விதத்தில் மனிதன் உலக வளங்களையும், உற்பத்திச் சக்திகளையும் அணிதிரட்டுவதைச் சுலபமாக்கியுள்ளது, அமெரிக்காவில் மட்டுமன்றி சோமாலியாவிலும் ஏன்ஒருவர் பட்டினிகிடக்க வேண்டும் என்பதற்கு நியாயமான காரணம் கிடையாது.

ஆனால் சமுதாயம் உழைக்கும் மக்களின் தேவைகளை வழங்கும் விதத்தில் அமைக்கப்படாமல் பக்டரிகளுக்கு சொந்தம் கொண்டாடும், பங்குமுதல் கணக்கைக் கட்டுப்படுத்தும் முதலாளிகளின் செல்வத்தையும், பலத்தையும் பேணும் விதத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

பாரசீக வளைகுடா யுத்தத்தின்போது முதலாளித்துவ அரசியல்வாதிகளும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இலட்சக்கணக்கான படைகள் மிகவும் நவீன ஆயுதங்களுடன் ஈராக்படைகளையும், குடிமக்களையும் படுகொலை செய்ய சப்பலில் அனுப்பப்பட்டிருக்கும் விதம் பற்றி ஜம்பம் அடித்துக் கொண்டனர். ஆனால் தென் புளோரிடாவில் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களைமீட்பது, அவர்களின் வீடுகளைத் திரும்பக் கட்டுவது தொடர்பாக ஒழுங்கமைப்பது பற்றிய பிரச்சினை வந்த போது அரசாங்கத்தினால் எதையும் செய்யமுடியவில்லை,

## வேர்க்கஸ் லீக் போராடுவதுஎதற்கு?

1992 தேர்தலில் 'வேர்க்கஸ் லீக்' முதலாளித்துவ நெருக்கடிக்கு ஒரு சோசலிசத் தீர்வை முன்வைக்கவே போட்டியிடுகின்றது, எமது வேலைத்திட்டம், மூன்று அடிப்படை அரசியல் அவசியங்களை அங்கீகரிப்பதை அடிப்படையாகக் கொண்டது:

1 அனைத்துலகத் தொழிலாள வர்க்க ஐக்கியத்தின் அவசியம்: முதலாளித்துவம் ஒரு முழு உலகப் பொருளாதார அமைப்பு. அமெரிக்கத் தொழிலாளர் அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் ஒரு பாகம், ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிலாளர், மலிவான உழைப்பையும், உயர்ந்த இலாபத்தையும் தேடி ஒரு உலகளாவிய ரீதியில் உற்பத்தியில் ஈடுபட்டு, உற்பத்தியை ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கு நகர்த்தும் பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள்,

எமது வேட்பாளர்கள் பொருளாதார தேசிய வாதத்தினைக்கண்டிக்கிறார்கள், அது தொழிற்சங்க அதிகாரத்தின் முழு ஆதரவோடு அமெரிக்கத் தொழிலாளர்களை உலகம் பூராவும் உள்ள அவர்களின் வர்க்க சகோதரர்களுக்கு எதிராக நிறுத்துகின்றது, அமெரிக்கத் தொழிலாளர்கள் இந்த முதலாளித்துவ விளையாட்டை அணுகி ஆராய்வதோடு, ஐரோப்பாவில் உள்ள தொழிலாளர்களின் போராட்டங்களுடன் தமது போராட்டத்தை ஐக்கியப் படுத்தும் ஒரு அனைத்துலகப் புரட்சிகர மூலோபாயத்தினைக் கடைப்பிடிக்கின்றனர்,

வேர்க்கஸ் லீக்கும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் எமது சக சிந்தனையாளர்களும் மட்டும் முதலாளித்துவத்துக்கு எதிராக உலகப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தினை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஒரு உலகக் கட்சியைக் கட்டி எழுப்பி வருகின்றனர்,

2 ஒரு தொழிலாளர் அரசாங்கத்திற்குப் போராடும் ஒரு புதிய, சுயாதீனமான தொழிலாளர் கட்சியை கட்டி எழுப்புவதன் அவசியம்: ஜனநாயகக் கட்சிக்காரர்கள், குடியரசுக் கட்சிக் காரர்கள், றோஸ் பெரொட் போன்ற கோடீஸ்வரரான 'சுயேட்சைகள்' அனைவரும் செல்வந்தர்களை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். ஆளும் வர்க்கத்துக்கு இரண்டு அரசியல் கட்சிகள் உண்டு, ஆனால் தொழிலாளி வர்க்கத்துக்கு ஒன்றும் இல்லை, தொழிலாளி வர்க்கம் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினை பெரும் வர்த்தகக் கம்பனிகளுக்கும் அதன் இரு கட்சிகளுக்கும் 'எதிராக ஒரு பரந்த அரசியல் இயக்கத்தை அணிதிரட்டுவதே, வேர்க்கஸ் லீக்' தொழிலாளர்களை ஜனநாயக, குடியரசுக் கட்சிகளில் இருந்து பிரித்து, ஒரு சுயாதீனமான தொழிலாளர் கட்சியைக் கட்டியெழுப்பப் போராடுகின்றது, தொழிலாளர் கட்சி, தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவினரையும் — கறுப்பர், வெள்ளையர், ஹிஸ்பானியர், வெளிநாட்டவர், தொழிற்சங்கத்தில் சேர்ந்தோர், அணிதிரட்டப்படாதோர், தொழில் செய்வோர், வேலையற்றோர்—ஐக்கியப்படுத்த வேண்டும். அது தொழிலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு போராட்டத்தையும் பக்டரி மூடுவிழாக்கள், இனவாதம், வரவு-செலவுத்திட்ட வெட்டுக்கள், தொழிற்சங்க உடைப்பு — ஒரு தொழிலாளர் அரசாங்கத்தை நிர்மாணிப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த இயக்கத்தினுள் கொணர வேண்டும்,

3 சோசலிசத்துக்கான அவசியம்: ஆங்கில மொழியிலுள்ள வார்த்தைகளில் 'சோசலிசம்' போன்று தவறாகப் பயன்படுத்தப்பட்ட—பிழையாக அர்த்தப்படுத்தப்பட்ட வேறு வார்த்தை கிடையாது. அமெரிக்காவில் தொழிலா

(7ம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவத் தொழிலாளர் ஒத்துழைப்பு: வர்க்கக் கோலம் அம்பலம்

அட்டன பிரதேச கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு (கம்கறு செவன) என்ற அமைப்பு, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தொழிற் சங்கமான பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்திற்கு கூட்டம் நடாத்த தமது மண்டபத்தை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது. கூட்டங்களுக்காக சகல அரசியல் கட்சிகள், அமைப்புக்களுக்கும் இம் மண்டபத்தை வழங்கும் இவர்கள், கொழும்பு தலைமையகத்தின் உத்தரவின் பேரில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக அறிவித்துள்ளனர், இரத்மலானை கி.தொ. ஒ. நிலையத்தில் பல வருடங்களாகத் தொழில் புரிந்து வந்த கிருசாந்த ஜயசிங்க, சரத் குமார என்ற தொழிலாளர்களை இப் பிற்போக்கு கிறிஸ்தவ இயக்கம் வேலை நீக்கம் செய்ததை எதிர்த்து, அவர்களின் தொழில் உரிமைக்காக பு.க.க. போராடியது.

இந்த கி. தொ. ஒ. அட்டன் பிரதேச பிரமுகரான மோகன் சுப்பிரமணியம் என்பவர் இத் தொழிலாளர் போராட்டத்தை முன்னெடுத்தமைக்காக பு.க.க. மன்னிப்பு கோரினால் மண்டபம் வழங்கப்படும் என நிபந்தனை விதிக்குமளவுக்கு நாற்றம் கண்டுள்ளனர். இந்த சுப்பிரமணியம், ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## குரோதம்

ஏகாதிபத்தியச் சார்பானதும், சந்தேகத்துக்கிடமானதுமான அமைப்புக்களிடம் இருந்து நிதிகளைக் கறக்கும் இத்தகைய பிற்போக்கு அமைப்புக்கள், தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான பாத்திரத்திற்கும் அரசியல் அமைப்புக்கும் காட்டும் குரோதத்தினை பு. க. க. சம்பந்தமாக கி. தொ. ஒ. கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டின் மூலம் காட்டிக் கொண்டுள்ளன. 'சர்வோதய' போன்ற பிற்போக்கு வலதுசாரி இயக்கங்களின் சதிகளுக்கு எதுவிதத்திலும் குறையாத பாத்திரத்தினை 'இடதுசாரி' வேடம் போடும் இவ் வமைப்புக்கள் தாங்குகின்றன. சமசமாஜ, கம்யூனிச கட்சி அங்கத்தினர்களை தலைமையாகக் கொண்ட இந்த அமைப்பு, மே தினத்தில் தமது கட்சி பதாகைக்குப் புறம்பாக 'சிலுவை' ஊர்வலத்தை நடாத்துவது அவர்களின் வர்க்கக் கோலத்தை காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிச வேட்பாளருக்கு...



மார்டின் மக்லோலின்
மாவட்டம் - 16
டியர்போன்
டவுன்றிவர், மொன்றோ



போல் ஜெரார்
மாவட்டம் - 14
பென்சில்வேனியா

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் இதை வெறுக்கும்படியும், கிலியடையும்படியு போதிக்கப்பட்டனர், உண்மையில் இது என்ன என்பது பற்றி அவர்களுக்கு ஒரு போதும் கூறப்பட்டதில்லை. உண்மையில் சோசலிசம் என்பது செல்வந்தர்களின் இலாபத்திற்கன்றி உழைக்கும் மக்களின் தேவைகளை இட்டு நிரப்பச் சமுதாயத்தை அணிதிரட்டுவதாகும். செல்வம், பக்டரிகளின் சொந்தக்காரர்களான முதலாளிகளால் அன்றி, அவற்றுள் உழைக்கும் ஆண், பெண்ணினாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது என்றவிஞ்ஞான ரீதியான உண்மையை அடிப்படையாகக் கொண்டதே சோசலிசம்,

இந்த அடிப்படை உண்மையில் இருந்து தொழிலாளர்கள் வங்குரோத்து இலாப அமைப்பினை அடிப்படையாக கொள்ள முடியாது என்பது தர்க்க ரீதியாக வெளிப்படுகின்றது. முதலாளித்துவம் தொழில்களையும், கண்ணியமான வாழ்க்கைத் தரத்தினையும் வழங்க முடியாது போனால் அது ஒழிக்கப்பட்டு ஒரு புதியதும் உயர்ந்தது மான அமைப்பினால் — சோசலிசத்தினால் பதிலீடு செய்யப்பட வேண்டும்.

## வேர்க்கஸ் லீக்கின் கோரிக்கைகள்

தொழிலும் ஒரு உத்தரவாதம் செய்யப்பட்ட வருமானமும்:

★ எஸ், அன்ட் எல்(சேவிங்ஸ் அன்ட் லோன்) மோசடிக்காரர்களைப் பல மில்லியன் டாலர்களைக் கொட்டிப் பிணை எடுப்பதற்குப் பதிலாக வேலையற்ற சகல தொழிலாளர்களுக்கும் தொழில் வழங்கவும் நகரங்களை மீள நிர்மாணிக்கவும்—பாடசாலைகள், குறைந்த வாடகை வீடமைப்புக்கள், ஆஸ்பத்திரிகள், பொழுதுபோக்கு நிலையங்கள், பூங்காக்கள், நவீன வெகுஜன போக்குவரத்துக்கள் —அரசாங்கத்தினால் இயக்கப்படும் விரிவான சமூகசேம நல அமைப்புக்களில் ஊழியர்களை நியமனம் செய்யவும் ஒரு 50000 கோடி டாலர் பகிரங்க வேலைத்திட்டத்தினை ஆரம்பி!

★ சகலருக்கும் தொழில் வழங்கும் விதத்தில் சம்பளத்தில் இழப்பு ஏற்படாமல் கிழமை வேலை நேரத்தை 30 மணித்தியாலங்களாக்கு! தொழிலாளர்களின் சுமைகளைக் குறைப்பதற்கு தொழிலாளர்களின் ஓய்வு நேரத்தினை விரிவுபடுத்து!

★ குறைந்த பட்ச வருட வருமானத்தை 20,000 டாலராக உத்தரவாதம் செய்! பணவீக்கத்தில் இருந்து தொழிலாளர்களைக் காக்க வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணை அமுல் செய்!

## கண்ணியமான போசாக்கு, வீடு, சுகாதாரம், கல்வி

★ உணவு முத்திரைத் திட்டத்தினை விரிவுபடுத்தி நன்மைகளின் அளவை இரட்டிப்பாக்கு! அவசியமானவர்களுக்கு உயர்ந்த தரமான வசிப்பிடங்களை உடன்வழங்கு! குறைந்த வாடகையும் உயர்ந்த தரமும் கொண்ட வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தை உடனடியாக அமுல்செய்!

★ சகலருக்கும் இலவசமானதும் உயர்ந்த தரமுமான சுகாதார பாதுகாப்பை வ்ழங்கும் பொருட்டு ஒரு சர்வ ஜன அரசாங்க வைத்திய முறையை நிறுவு!

★ புதிய பாடசாலைகளை நிறுவு! போதனை, தொழில்நுட்பம் சம்பந்தமான மிகவும் முன்னேற்றமான கருவிகளை வழங்கு! கூடுதலான ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்து! கல்லூரிகளுக்குச் செல்ல விரும்பும் அனைவருக்கும் இலவச உயர்கல்வி

## பூரண ஜனநாயக உரிமைகள்

★ விருப்பத்தின் பேரில் சகல பெண்களுக்கும் கருச்சிதைவு செய்துகொள்ள வரையறையற்ற உரிமை வழங்கு!

★ தொழில், வீடமைப்பு, கல்வியில் இனவாத பேதங்களை நீக்கு! பால் வேறுபாடு பால் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பேதங்களை நீக்கு! பத்திரங்கள் இல்லாதவர்கள் உட்பட சகல வெளிநாட்டு தொழிலாளர்களுக்கும் முழு குடியுரிமை!

★ சகல அரசியல், 'வர்க்க' யுத்தக் கைதிகளையும் விடுதலை செய்! பொய் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட கிறேஹவுண்ட் வேலை நிறுத்தக்காரர் றொஜர் கவுத்ரா. கூறி டெயிலர், முதலாளித்துவ அடக்குமுறைக்கு எதிராக போராடியதற்காக சிறைவைக்கப்பட்ட சகலரையும் விடுதலை செய்!

★ வேலைநிறுத்த முறியடிப்பு குண்டர்களையும், கம்பனிகளின் துப்பாக்கிக் காடையர்களையும் கூலிக்கு அமர்த்துவதை தடை செய்! சகல தொழிற்சங்க எதிர்ப்புச் சட்டங்களையும் நீக்கு! வேலைகொள்வோரிடம் இருந்தும் அரசிடமிருந்தும் தொழிற்சங்கங்களின் சுயாதீனத்தையும், தொழிற்சங்கங்களுள் பூரண ஜனநாயகத்தையும் நிலைநாட்டு!

★ மரணதண்டனையை நீக்கு!

## சமாதானம்

★ உலகெங்கும் உள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுடன் சகோதரத்துவ உறவுகளின் அடிப்படையில் ஒரு சோசலிச வெளிநாட்டுக் கொள்கையை ஸ்தாபிதம் செய்!

★ பென்டகனையும், சீ. ஐ. ஏ, யையும் ஒழித்துக் கட்டு! சகல துருப்புக்களையும் வாபஸ் பெறு! வெளிநாட்டில் அமெரிக்க ஏகாதிபத்தியம் பராமரித்துவரும் சகல தளங்களையும் தகர்த்து எறி! தொழிலாளர்களின் வேலைகள், சம்பளங்கள், நலன்களில் இழப்பு ஏற்படாத விதத்தில் சகல யுத்தக் கைத்தொழில்களையும் பயனுள்ள உற்பத்திக்குத் திருப்பு!

இந்த வேலைத்திட்டத்தினை அமுல் செய்யத் தொழிலாளி வர்க்கம் ஆளும் வர்க்கத்தின் பொருளாதார சர்வாதிகாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும். மக்களின் பொருளாதார வாழ்வுக்கும் நலனுக்கும் தீர்க்கமான சகல வளங்களும் பக்டரிகளிலும், சுரங்கங்களிலும், களங்களிலும், அலுவலகங்களிலும் செல்வத்தை உற்பத்தி செய்வோரின் ஜனநாயக ரீதியில் நிர்வகிக்கப்படும் பொது உடமையின் கீழ் கொணரப்பட வேண்டும்.

உற்பத்திச் சக்திகள் தொடர்ந்தும் வசதிகள் படைத்த சிலரின் இலாப நோக்கங்களுக்கு கீழ்ப்படுத்தப்படாததாலும் முதலாளித்துவச் சந்தையின் அராஜகத்தில் இருந்து பொருளாதாரம் விடுதலை செய்யப்படுவதாலும் தொழிலாளி வர்க்கம் முழுச் சமுதாயத்தினதும் நலனுக்காக பொருட்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் ஒருங்கமைக்க கணனித் தொழில் நுட்பத்தையும், நவீன தொலைத் தொடர்புகளையும் பயன்படுத்தி, ஒரு விஞ்ஞானத் திட்டமிடலின் அடிப்படையில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும்,

★ வங்கிகள், முழுக் சடன் அமைப்பினை தொழிலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் தேசிய மயமாக்கு! வங்கிகளுக்கு சமஷ்டி, மாநில, உள்ளூராட்சி அரசாங்கங்கள் வழங்க வேண்டிய கடன்களை இரத்துச் செய்! சரக்குமூதல், வர்த்தக சந்தைகள் என்ற பேரில் அழைக்கப்படும் சட்டரீதியான சுற்றுமாற்றுக்களை ஒழித்துக் கட்டு.

★ அத்தியாவசிய சேவைகளையும் மற்றும் முக்கிய உற்பத்திக் கைத்தொழில்களையும் தேசியமயமாக்கி, ஜனநாயக ரீதியில் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் மீளக்கட்டியெழுப்பு!

## ஒரு புதிய தலைமை அவசியம்

ஒரு கசப்பான போராட்டம் இல்லாமல் இந்த வேலைத்திட்டத்தினை அடைய முடியாது. ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஒரு பாரிய அளவிலான மாற்றம் இல்லாமல் ஒரு நிசப் போராட்டம் சாத்தியம் இல்லை. இதன் அர்த்தம், எல்லாவற்றுக்கும் முதல் தொழிலாளி வர்க்கத்தின் புதிய, புரட்சிகர இயக்கமாக அரசியல் முன்னணிப் படையாக வேர்க்கஸ் லீக்கை கட்டி எழுப்புவதாகும்,

பழைய அமைப்புக்களாலும், அவைகளுக்கு தலைமை தாங்கியவர்களாலும் தொழிலாளர்கள் கைவிடப்பட்டதோடு காட்டிக் கொடுக்கவும் பட்டனர் என்பது ஒரு துன்பமான உண்மையாகும், 1930பதுகளில் மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் பொருளாதார மந்த நிலைமைக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தனர். அத்தோடு கம்பனி முதலாளிகளினதும் அரசாங்கத்தினதும் வன்முறை எதிர்ப்புக்களுக்கு எதிராகப் பலம் வாய்ந்த போராட்டங்களைத் தொடுத்தனர். அக்காலப் பகுதியில் நிறுவப்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

புலத்சிங்கள:

## தனியார் மயமாக்கத்துக்கு எதிர்ப்பு

தோட்டத் துறையை தனியார்மயமாக்கி தொழிலாளர்களை இலட்சக் கணக்கில் வேலை நீக்கம் செய்யவும், வேலையை துரிதப்படுத்தவும் வேலை நாளை வெட்டவும் உலக வங்கி விடுத்துள்ள கட்டளையை, அமுல் செய்யும் நடவடிக்கைகள் விதிவிலக்கற்ற விதத்தில் புலத்சிங்கள தோட்டங்களிலும் ஆரம்பமாகியுள்ளன. மக்லூட் கம்பனி விலைக்கு வாங்கிய திருவான கட்டிய தோட்டத்தின் கிங்ஸ்லி பிரிவின் தொழிலாளர்கள் இத்தாக்குதல்களுக்கு எதிராக இ. தொ. கா. கிளையை அமைத்துக் கொண்டு போராட முயன்றனர். ஜூலை 4ம் திகதி முதல் கூட்டத்தை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் தோட்டத்தில் செய்யப்பட்டு இருந்தது. இதில் தலையிட்ட தோட்ட உதவி சுப்பிரின்டனான அனுரா பெரேராவும் வேலைக்கள அதிகாரி திசாநாயக்கவும் இக்கூட்டத்தை தடை செய்ததோடு, ஒலிபெருக்கி கொணர்ந்த வாகனத்தையும் திருப்பி அனுப்பினர். அத்தோடு தொழிலாளர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என மிரட்டும் வேலையில் ஜினதாச, குணவங்ச, ரத்னபால, சுமணசேன, குணதாச, பியதாச, பிரேமதாச என்ற காவலாளிகளை நிர்வாகம் ஈடுபடுத்தியது.

தோட்ட நிர்வாகிகளின் தடை உத்தரவுக்கும் குண்டர்களின் மிரட்டல்களுக்கும் எதிராக தொழிலாளர்களின் வர்க்க அமைப்புச் சக்தியை அணிதிரட்டுவதை விடுத்து, இ. தொ. கா. தலைவர்கள் பொலிசாரின் 'பாதுகாப்புடன்' கூட்டம் நடாத்தினர். சங்கத் தலைவர்கள் பொலிசாரின் உதவியுடன் தோட்ட நிர்வாகம் நடத்திவரும் ஒடுக்குமுறை பற்றி இக்கூட்டத்தில் வாயும் திறக்கவில்லை. தலைவர்கள் பொலிஸ் பாதுகாப்புடன் கலைந்து சென்றாலும் நிர்வாகிகளுக்கும் குண்டர்களுக்கும் முகம் கொடுக்கும் தொழிலாளர் என்ன செய்ய வேண்டும்? தொழிலாளர்கள் தோட்டத்தில் பாதுகாப்பு கமிட்டிகளை நிறுவ நடவடிக்கை எடுப்பதோடு, இ.தொ. கா.உள்ளடங்கலான தொழிலாளர் வர்க்க சக்தியை இதற்கு எதிராக அணிதிரட்ட போராட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வேட்டைக்கு எதிராக மாணவர், பெற்றோர் போராட்டம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தினர்கள், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தினர்கள் உட்பட 110 ஆசிரியர்கள் அவர்கள் சேவையாற்றிய பாடசாலைகளில் இருந்து திடீர் அரசியல் இடமாற்றத்துக்கு உள்ளானதை எதிர்த்து வெலிமட லுணுவத்த மகாவித்தியாலய மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர். இந்த இடமாற்றங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு இடம் பெற்ற இப் பகிஷ்கரிப்புக்கு பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவும் கிடைத்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மாஜி உப-செயலாளரும் பு.க.க. உறுப்பினருமான பானி விஜேசிரிவர்தனா மீரகாவத்த மகாவித்தியாலயத்தில் இருந்து மஹியங்கணை மகாவித்தியாலயத்துக்கும் இ. ஆ. ச. பண்டாரவளை மாவட்டச் செயலாளர் சங்கதாச மாரசிங்க லுணுவத்த மகாவித்தியாலயத்தில் இருந்து மஹியங்கணை கொபேல்வில மகாவித்தியாலயத்துக்கும்; ஆர். எம், தயானந்த பண்டாரவளை விசாகா வித்தியாலயத்தில் இருந்து கரகஹவெல வித்தியாலயத்துக்கும் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் 'கஷ்டப் பிரதேசம்' எனப் பேர்போன இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த இடமாற்றங்களை இரத்துச் செய்யும் படி வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வரும் லுணுவத்த மகாவித்தியாலய மாணவர்களுக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'தொழிலாளர் பாதை' யும் பேராதரவு வழங்குகின்றன, அத்தோடு இம் மாணவர்களின் போராட்டத்தினைப் பாதுகாக்க ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்பட முழு தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரளுமாறு நாம் வேண்டுகின்றோம்.

இந்த ஆசிரியர் வேட்டைகள், பாடசாலைகளில் புதிய பாடசாலை அபிவிருத்திச் சபைகளை நிறுவுவதன் மூலம் பாடசாலை பராமரிப்புச் சுமை முழுவதையும் ஏழைப் பெற்றோர்கள் மீது திணிக்கும் உலக வங்கி, யூ.என்,பி. அரசாங்கத் திட்டத்தின் ஒரு பாகம் ஆகும். இதன் மூலம் ஏழை தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்களின் இலட்சோப இலட்சம் குழந்தைகள் இலவசக் கல்வி உரிமையை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்தச் சதிகளுக்கு எதிரான போராட்டத்தில் பு. க. க. முன்னணியில் நிற்பதால் அதன் உறுப்பினர்கள் இந்த வேட்டையில் முக்கிய இலக்சாக்கப்பட்டுள்ளனர்.

யூ.என்,பி. அரசாங்கத்தை வெளியேற்றி, சோசலிச வேலைத் திட்டத்தினை அமுல் செய்யும் தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்தை (தமிழ் ஈழம் — இலங்கை சோசலிச குடியரசு) நிறுவுதல் இந்த உரிமைகளைக் காப்பதற்கான ஒரே வேலைத்திட்டமாகும். இத் தாக்குதல்களின் ஒரு பாகமாக யூ.என்.பி. அரசாங்கம், வடக்கு — கிழக்கு இனவாத யுத்தத்தினால் அங்கிருந்து வெளியேறி நாட்டின் பல்வேறு பாகங்களிலும் அற்ப அலவன்சுக்கு சேவை செய்யும் ஆசிரியர்களை உடனடியாக வடக்கு - கிழக்குக்குத் திரும்பும் கட்டளையைப் பிறப்பித்துள்ளது. வடக்கு – கிழக்கு ஒடுக்கப்படும் தமிழ் மாணவர்களின் இலவசக் கல்வி மீதான யூ. என். பி. அரசாங்கத்தின் இந்த 'அக்கறை'க்கு எதிராக இந்த இடமாற்ற உத்தரவை இரத்துச் செய்யும் படியும் வடக்கு கிழக்கில் இருந்து ஆயுதப் படைகளை வாபஸ் பெறவும், இனவாத யுத்தத்தை நிறுத்தவும் இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் உள்ளடங்கலான முழுத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் போராடுவது அவசியம்.

# சோசலிச வேட்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கங்கள், கம்பனிகளது முதலாளிகளின் கைக்குள் இருந்துவரும் வசதி வாய்ப்புக்கள் படைத்த அதிகாரத்துவங்களின் கிளப்புகளாகப் பரிணாமம் செய்யப்பட்டன, AFL-CIO தொழிலாளி வர்க்கத்தின் ஒரு அமைப்பு அன்றி, ஊழலும், ஒட்டுண்ணித்தனமும் நிறைந்த அதிகாரத்துவத்தின் ஒரு அமைப்பாகும்.

இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத்தரமும், அடிப்படை உரிமைகளும் நாசமாக்கப்பட்டுள்ளதால் கொடுமைப்படுத்தப் பட்டுள்ளனர், இதனால் அவர்கள் ஆளும் வர்க்கத்தின் யுத்த முஸ்தீபுகளை எதிர்க்கின்றனர். குடியரசு, ஜனநாயகக் கடசிகள் இரண்டினதும் தொழிலாளர் விரோதக் கொள்கைகளில் வெறுப்படைந்துள்ளனர். ஆனால் தொழிலாளி வர்க்கம் தனது சொந்த சுயாதீனமான வேலைத் திட்டத்தினை முன்வைப்பதை முதலாளித்துவ அமைப்பை பேணுகின்றதும், ஜனநாயகக் கட்சியை ஆதரிக்கின்றதுமான ஏ, எப். எல்.- சீ, ஐ, ஓ., ஐக்கிய மோட்டார் தொழிலாளர் தலைமைகளின் துரோகம் தடுத்து நிறுத்தியுள்ளது,

கிளின்டனின் வாக்குகளின் எண்ணிக்கைகளைக் கூட்டும் பொருட்டு தொழிற்சங்க அதிகாரத்துவங்கள், ஜனநாயகக் கட்சிக்காரர்கள் 'இரண்டு கெடுதிகளிலும் குறைந்த கெடுதி' என்ற பரிதாபமானதும் வங்குரோத்தானதுமான வாதத்தினை முன்னெடுப்பதில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் கிளின்டனுக்கு ஆதரவு லழங்கும் எந்தவொரு தொழிலாளியும் கொடுமையான ஏமாற்றம் அடைய நேரிடும். ஆர்க்கன்சாஸ் மாநிலத்தின் ஆளுனராக அவர் 14 ஆண்டுகள் விளங்கினார், அதன் குறைந்த ஊதியம், சௌக்கிய, பாதுகாப்பு விதிகளில் இருந்து சுதந்திரம் எனக் கூறிக்கொண்டு வர்த்தக சார்பு, தொழிற்சங்க விரோத சூழ்நிலையை மாநிலத்தில் வளர்த்து வந்தார்.

ஏ. எப்- எல், - சீ. ஐ. ஓ: துரோகிகள் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து தூக்கி வீசப்படுவதோடு ஜனநாயக கட்சியுடனரன அவர்களின் கூட்டுக்கள் நிராகரிக்கப்பட வேண்டும், வேர்க்கஸ் லீக்கின் தேர்தல் பிரச்சாரத்தின் மைய இலக்கு ஒரு புதிய தலைமையைக் கட்டி எழுப்புவதே, அது ஒரு அனைத்துலக, சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை நிலைநாட்டும்.

## வேர்க்கஸ் லீக்கையும், நான்காம் அகிலத்தையும் கட்டியெழுப்பு

அனைத்துலகவாத சோசலிச வேலைத்திட்டத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் அமெரிக்காவில் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரே கட்சி வேர்க்கஸ் லீக்கே. வேர்க்கஸ் லீக்கின் மூலம் ஸ்டாலினிசத்துக்கு எதிராக 1938ல்லியொன்ட்ரொட்ஸ்கியால்ஸ்தாபிதம்செய்யப்பட்ட நான்காம் அகிலத்தினால் தொடுக்கப்பட்ட போராட்டத்தில் வேரூன்றியுள்ளது, எமது இயக்கம் ஸ்டாலினிசம், ஏகாதிபத்தியம் இரண்டினதும் இரத்தம் தோய்ந்த கொலைகளில் இருந்து உயிர் பிழைத்தது.

பெரும் வர்த்தக அரசியல்வாதிகளும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னைய சோவியத் யூனியனிலும் ஆட்சிகளின் வீட்சிகளைச் சுட்டிக்காட்டி 'சோசலிசம் பொய்த்துவிட்டது' எனப் பிரகடனம் செய்கின்றனர். இது ஒரு பொய். கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் யூனியனிலும் பொய்த்தது சோசலிசம் அன்றி, தொழிலாளி வர்க்கத்திடம் இருந்து அதிகாரத்தை அபகரித்துக் கொண்ட ஸ்டாலினிசத்தின் -வசதி வாய்ப்புக் கொண்ட அதிகாரத்துவத்தின் சர்வாதிகாரமே. அது ருஷ்யப் புரட்சியைக் காட்டிக் கொடுத்ததோடு அனைத்துலக சோசலிசத்தின் வேலைத்திட்டத்தையும் கைவிட்டது,

வேர்க்கஸ் லீக் 1966ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்டு ஸ்தாபிதம் செய்யப்பட்டது, எமது கட்சியும், எமது வார இதழான 'புலட்டின்'பத்திரிகையும் தொழிலாள வர்க்கத்தைப் பேண தொடுத்த இடைவிடாத போராட்டத்தின் அறிக்கையாகும். தொழிற்சங்க உடைப்பு, பக்டரி மூடுதல், வரவு — செலவுத்திட்ட வெட்டு, யுத்தத்திற்குஎதிரான போராட்டத்தில் நாம் முன்னணியில் நின்று வந்துள்ளோம். உழைக்கும் மக்கள் முகம் கொடுக்கும் ஒவ்வொரு முக்கிய சமூக, அரசியல் பிரச்சினைகளிலும் எமது கட்சி போராடவும் தலைமை வழங்கவும் அதற்குள்ள சக்தியை வெளிக்காட்டிக் கொண்டுள்ளது.

முதலாளித்துவத்துக்கு எதிராக சகல தொழிலாளர்களதும் போராட்டங்களை ஐக்கியப்படுத்தவும், தொழிலாளி வர்க்கத்தின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தை நிறுவவும் வேர்க்கஸ் லீக் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் இணைந்து போராடுகின்றது.

## தேர்தல் பிரச்சாரத்துக்கு ஆதரவளியுங்கள் வேர்க்கஸ் லீக்கை கட்டி எழுப்புங்கள்

எமது தேர்தல் பிரச்சாரத்துக்கு ஆதரவு தருமாறு சகல தொழிலாளர்களையும் நாம் அழைக்கின்றோம், வேர்க்கஸ் லீக் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள்! ஜனநாயக விரோத, கட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் சட்டங்கள் காரணமாக ஹெலியாட்டும், மாசெல்சும் வாக்குச்சீட்டில் இல்லாத மாநிலங்களில் வேர்க்கஸ் லீக் வேட்பாளருக்கு எழுதி வாக்களிக்குமாறு வேண்டுகின்றோம்,

நவம்பர் தேர்தலில் எந்த முதலாளித்துவ அரசியல் வாதி வெற்றியடைகின்றார் என்பதைப் பொருட்படுத்தாமல், பிரமாண்டமான வர்க்கப் போர்களுக்கான மேடை தயாராகி வருகின்றது. எமது சோசலிச வேலைத்திட்டத்தைக் கருத்தில் கொண்டு, வேர்க்கஸ் லீக்கில் சேரத் தீர்மானம் செய்யும்படியும், தொழிலாளி வர்க்கத்தின் புதிய புரட்சிகரத் தலைமையாகக் கட்டி எழுப்புமாறும் நாம் தொழிலாளர்கள், இளைஞர்கள், வேலையற்றோரை வேண்டுகின்றோம்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## பால்கனில் கைவையா.... மனித உரிமைக் கூச்சல்

7 மிகவும் திட்டவட்டமான பொருளாதார, அரசியல் நலன்களால் உந்தித் தள்ளப்படும் போதுமட்டுமே ஏகாதிபத்தியவாதிகளின் உள்ளக் குமுறல்கள் வெடித்ததை வரலாறு காட்டியுள்ளது. பொஸ்னியாவில் மனித உரிமைகள் பற்றிய கூச்சல் எழுப்பப்படும் அதேசமயம் மரணத்தை எதிர்நோக்கியுள்ள இலட்சேப இலட்சம் சோமாலிய மக்களின் துயரங்களையிட்டு அலட்சியம் காட்டப்படுகின்றது. நேற்றைய 'அக்கினிக் களமாக' விளங்கிய ஆபிரிக்கமுனையின் விரகி முக்கியத்துவம், சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதுடன் கலைந்து போயிற்று,

ஏகாதிபத்தியவாதிகள் பால்கனில் யுத்தத்தினை நிர்மாணிப்பதில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளனர் என்பதே உண்மை. சில காலத்திற்கு முன்னர் அவர்கள் தீர்மானம் செய்த கொள்கைக்கான ஒரு மூடு திரையாக மட்டுமே அட்டூழியங்களைப் பற்றி அக்கறை காட்டுகின்றனர். அத்தகைய ஒரு தலையீட்டின் நோக்கம் பொஸ்னியர்களை ஆபத்தில் இருந்து மீட்டெடுப்பதோ அல்லது சேர்பியர்களின் 'ஆக்கிரமிப்பினை' நிறுத்துவதோ அல்ல. ஒரு காலத்தில் யூகோசலவியாவை சிருஷ்டித்த பல்வேறு தேசியக் குழுக்களிடையே இவை உண்மையில் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதில்லை. உலகில் உள்ள சகல நாடுகளிலும் இன சகோதரத்துவம் பற்றிய படிப்பினையைவழங்க அமெரிக்கா போன்ற குறைந்த தரத்தில் வேறு எதுவும் இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெள்ளையனே வெளியேறு' இயக்கமும் சமசமாஜக் கட்சியின் சந்தர்ப்பவாதமும்

(கடந்த இதழின் தொடர்ச்சி)

நந்த விக்கிரமசிங்க

## நான்காம் அகிலத்தின் போராட்டம்

1942 ஆகஸ்டில்—வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் நடுமத்தியில் நான்காம் அகிலத்தின் இந்தியக் கிளையான போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சி, மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற இந்திய முதலாளித்துவத் தலைவர்களின் நடவடிக்கைகளைப் பின்வருமாறுவிபரித்தது இந்''தியத் தொழிலாளர்களே! விவசாயிகளே! பிரித்தானிய அடிமைத் தளையைச் சட்டை செய்யாதவர்களிடம் எச்சரிக்கையாய் இருங்கள்! பாரம் இழுக்கும் மிருகங்களைப் போல் தள்ளாடுபவர்களே, வறுமையில் வாடுபவர்களே! வெளிநாட்டு அடிமைத் தளையை உடைத்தெறிய உங்களால் மட்டுமே முடியும். பிரித்தானிய முதலாளிகளின் டாம்பீகத்தையும் தாண்டும் பிரமாண்டமான மாளிகைகளில் உலாவுபவர்களுக்கும் காங்கிரஸ் மகாநாடுகளில் ஒரு ஆசனத்துக்கு ரூபா 1000/க்கு மேலாக வழங்குபவர்களுக்கும் பிரித்தானிய அடிமைத்தளை உங்களைப்போல் தாங்கமுடியாத ஒரு சுமை அல்ல. அவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளுடன் கொள்ளையைப் பகிர்ந்து கொள்வதிலேயே போட்டியிடுகின்றார்கள்; பிர்லா, ராஜாஜீ போன்றவர்களுக்கு அவசியமாயிருப்பது இந்தியத் தொழிலாளர், விவசாயிகளைச் சுரண்டுகையில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு வழங்கும் மாபெரும் பங்கினைக் குறைத்துக் கொள்வதே, பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் போட்டியிடும் அதேவேளையில் இந்த முதலாளித்துவக் காங்கிரஸ் கட்சிக் காரர்களும் அவர்களின் அரசியல் ஏஜண்டுகளும் அச்சத்துடன் பின்னால் திரும்பிப் பார்க்கின்றனர். எல்லாவற்றையும் விட பொதுமக்கள் இந்தியாவின் தலைவிதியை நிர்ணயம் செய்வதை தமது கைக்குள் கொணரலாமென இவர்கள் அச்சம் அடைந்துள்ளனர். அப்போது சுதந்திரத்துக்கான கோரிக்கை அரசியல் சுதந்திரமாக மட்டுமின்றி, சோசலிசத்தையும் உள்ளடக்கிக் கொள்ளுமோ என அவர்கள் அஞ்சுகின்றனர். சுதந்திர இயக்கம் தமது கைகளில் இருந்து நழுவிவிடுமோ என்ற அச்சத்தில் அவர்கள் மகாத்மா காந்தியின் அஹிம்சை இயக்கத்தை அதன் மேல் திணிக்கயல்கிறார்கள்.

''இந்திய மக்கள் தமது சுதந்திரப் போராட்டத்தினை அஹிம்சைப் பொறிக் கிடங்கினுள் அமுக்கி வைத்தால் ஆயிரம் ஆண்டுகள் போனாலும் தமது சுதந்திரத்தினை வெற்றி கொள்ளமாட்டார்கள்'' என்றது,

1944ல் போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியின் வரைவறிக்கை இந்திய தேசிய காங்கிரசின் வேலைத்திட்டத்தைப் பற்றி தெளிவாகக் குறிப்பிட்டது: ''தேசிய இயக்கத்தின் மீது தமது பிடியைக் கொண்டிருக்கும் பொருட்டு இந்திய முதலாளி வர்க்கம் பயன்படுத்தும் கருவி'' என இதை மதிப்பீடு செய்தது. இந்திய போல்ஷிவிக்— லெனினிஸ்ட் கட்சியின் அறிக்கை ''இந்திய காங்கிரசானது தனது இலக்கினை முன்னிட்டு குட்டி முதலாளித்துவத்தினையும் முடிந்தால் தொழிலாளர்களதும் ஆதரவினைத் தேடி வரும் இந்திய முதலாளித்துவத்தின் பாரம்பரியக் கட்சியாகும்'' எனச் சுட்டிக் காட்டுகின்றது, ''காங்கிரசினுள் புரட்சிகர, அரைப் புரட்சிகரப் பிரிவினர் இன்னமும் தொடர்ந்து இருந்து வரினும், அதன் அங்கத்துவம் 1939 அளவில் 50 இலட்சத்தை தாண்டியிருப்பினும், கதையளப்பு, ஜனநாயக வேலைத்திட்டங்கள் (அரசியலமைப்புச் சபை, விவசாயப் பிரச்சினைக்குத் தீர்வு) அதனால் முன்வைக்கப்படினும், அதன் அரசியல் போக்கு வழி நடாத்தப்படுவதும், திரிபுரா மகாநாட்டின் பின்னர் தெளிவாகியது போல் கட்சி ஆட்சிப்பீடம் நிர்வகிக்கப்படுவதும் முதலாளி வர்க்கத்தினாலேயேயாகும். சமூகச் சேர்க்கை, அமைப்பு, அரசியல் தலைமை என்ற இச்சகல விடயங்களிலும் இந்திய காங்கிரஸ் சீனப் புரட்சியைக் காட்டிக் கொடுத்து, தோல்வியை நோக்கி இட்டுச்சென்ற குவாமின்டாமுக்குச் சமமாக விளங்குகின்றது,

இந்திய காங்கிரசின் முதலாளித்துவத் தலைமை பற்றிய நிஜ மார்க்சிச நிலைப்பாட்டினை லியொன் ட்ரொட்ஸ்கி இந்திய போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சியின் அங்கத்தவரான செலீனா பெரேராவுக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார்:

''இந்தியாவினுள் முக்கிய பணி பிரித்தானிய ஆதிக்கத்தைத் தூக்கி வீசுவதே. இப்பணி, பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சகல எதிர்ப்பு நடவடிக்கைகள், புரட்சிகர நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்குமாறு தொழிலாளி வர்க்கத்துக்குப் பணிப்பு விடுத்துள்ளது.

''இந்த ஆதரவினை தேசிய முதலாளி வர்க்கத்தினையும் அவர்க்ளின் குட்டி முதலாளித்துவ ஏஜன்சிகளையும் பற்றிய பெரும் சந்தேகத்துடனேயே வழங்க வேண்டும்,

''நாம் அதனை ஒரு கணம் தன்னும் எமது அமைப்பு, எமது வேலைத்திட்டம், எமது பதாகையை அவர்களுடன் (வேலைத்திட்டம், பதாகை அல்லது அமைப்பு) கலந்து கொள்ள வேண்டியதில்லை.

''வேறாக நடை போடு, இணைந்து தாக்கு'' என்ற பழைய விதியை நாம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டி உள்ளது...''

## காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கை

இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் உள்ளே காங்கிரஸ் கட்சி ஆற்றிய பங்கு என்ன? இதனை 1939ல் யுத்த ஆரம்பத்தில் வர்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் அவர்கள் நிறைவேற்றிய பிரேரணை தெளிவு படுத்துகின்றது:

''யுத்தத்தின் பிரச்சினை ஜனநாயகத்தின்தும் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதுமான ஒரு உலகமானால் இந்தியா அதையிட்டு கண்டிப்பாக அக்கறை காட்டும். பிரித்தானியா போராடுவது ஜனநாயகம் பரவுவதை முன்னிட்டாயின், அது ஏகாதிபத்தியத்தினை தனது காலனிகளில் இருந்து ஒழித்து, இந்தியாவின் பூரண சுதந்திரத்தினை உறுதி செய்வதை அவசியம் செய்தாக வேண்டும்.''

இந்திய முதலாளி வர்க்கம், பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடனான கொடுக்கல் வாங்கல்களுக்காக யுத்தத்தினைப் பயன்படுத்த முயன்றது. 'வெள்ளையனே வெளியேறு, இயக்கத்தை ஆரம்பித்து வைத்து இந்திய தேசிய காங்கிரஸ் நிறைவேற்றிய பிரேரணை இதனைப் பின்வருமாறு சுட்டிக் காட்டியது:

இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவது ''இந்தியாவின் நலனுக்கும் நேச நாடுகளின் (பிரித்தானியா, அமெரிக்கா, பிரான்ஸ் ஏகாதிபத்தியவாதிகள்) நலனுக்கும் மிகவும் அவசரமான அவசியமாகி உள்ளது... என்பதை சம்பவங்கள் நிரூபித்துள்ளன, இந்தியாவினுள் பிரித்தானிய ஆட்சி தொடர்ந்தும் நீடிக்குமானால் இந்தியா சீர்கெட்டுப் போகும். அது தனது பாதுகாப்பை உண்டுபண்ணுவதிலும் உலகின் சுதந்திரத்திற்கு ஆதரவு வழங்குவதிலுமான வல்லமை வேகமாகச் சீரழிந்து போகும்.

''அதில் இந்தியக் காங்கிரஸ் [illegible] பவும் அனைத்து அவதானத்துடன் பிரித்தானிய ஆட்சி இந்தியாவில் இருந்து நீக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. (பிரித்தானிய அரசாங்கம் இந்தியாவில் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தவுடன் தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும். சுதந்திர இந்தியா நேச நாடுகளின் பங்காளியாகும்''

இத்தீர்மானம் ஒரு விடயத்தை நன்கு தெளிவு படுத்தியது; 'இந்தியாவின் சுதந்திரம், இந்தியாவை நசுக்கிக் கொண்டுள்ள பிரித்தானிய ஏகாதிபத்தியத்துச்கு எதிராக அன்றி அதனுடனும் அதன் நேச அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் சினேகபூர்வமான கொடுக்கல் வாங்கல்கள் மூலமே அடையமுடியும் என்றது.

இப்பாதையானது தொழிலாளர்—ஒடுக்கப்பட்டும் மக்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து, தமது மடியை நிரப்பிக் கொள்ளும் தேசிய முதலாளி வர்க்கத்தின் நலன்களுக்குப் பெரிதும் பொருத்தமாய் விளங்கியது,

1942ல் பிரித்தானிய ஏகாதிபத்தியம் மிகவும் சங்கடமான நிலைமைக்கு முகம் கொடுத்தது'' இந்நிலைமையினுள் (அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உதவியோடு) தமக்கு வாய்ப்பான ஒரு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட இந்திய முதலாளித்துவம் முயன்றது, அதே சமயத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் கிளர்ந்த தொழிலாள வர்க்க, ஒடுக்கப்படும் மக்கள் இயக்கத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்வதை முக்கிய இலக்காகக் கொண்டது,

1942 ஆகஸ்ட் மாதமளவில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் பிரமாண்டமான நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அது யுத்த தோல்விக்கு மட்டுமன்றி, பொருளாதார வங்குரோத்திற்கும் முகங்கொடுத்தது. ஜேர்மன் இராணுவம் ஐரோப்பாவின் மேற்கு முனையில் பிரான்சைக் கைப்பற்றிக் கொண்டு, பிரித்தானியாவினுள் பாய்வதற்கு ஆயத்தமாக இருந்தது, கிழக்கு ஐரோப்பிய முனையில் அவர்கள் இன்னமும் சோவியத் யூனியனுள் ஊடுருவியபடி லெனின்கிராட்டையும் ஸ்டாலின்கிராட்டையும் அச்சுறுத்திக் கொண்டிருந்தனர். வட ஆபிரிக்கக் கரையோரம் நெடுகிலும் முன்னேறி சுயஸ் கால்வாயை மிரட்டிக் கொண்டிருந்தனர்,

கிழக்கு ஆசியாவில் இந்தோசீனம், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேயா, சிங்கப்பூரைக் கைப்பற்றிய யப்பானியப்படைகள், அந்தமான்— நிக்கோபார் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டு இலங்கை, இந்தியாவை மட்டுமன்றி அவுஸ்திரேலியாவையும் அச்சுறுத்திக் கொண்டிருந்தன, அச்சு நாடுகளின் (ஜேர்மனி—யப்பான்) படைகள் தென் ஆசியாவில் சந்தித்துக் கொள்வது யதார்த்தமாகி வந்தது. பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் மரண ஓலம் கேட்டுக் கொண்டிருந்தது.

இதற்கிடையே பிரித்தானியா, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடனாளியாகிக் கொண்டு வந்தது. ஏகாதிபத்திய எதிரிகளின் இந்தப் பாரிய வெடிப்பு தொழிலாளி வர்க்கத்தினதும், ஏனைய ஒடுக்கப்படும் மக்களதும் பிரமாண்டமான எழுச்சிகளுக் களம் அமைத்துக் கொடுத்தது. எதுவிதமான விசாரணையும் இல்லாமல் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் யுத்தத்தினுள் இழுக்கப்பட்ட இந்திய ஒடுக்கப்படும் மக்கள் பாரிய அழிவுக்கு முகம் கொடுத்தனர். ஆயிரமாயிரம் இந்திய இளைஞர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் யுத்த முனைக்கு தள்ளப்பட்டதோடு, மரணம, சிறையின் பிடிக்குள் தள்ளப்பட்டனர். பிரித்தானிய யுத்த தயாரிப்புகளுக்காக மோசமான சுரண்டலுக்கு உள்ளான முழு நாடும் தொற்றுநோய்களுக்கும் பலியாகி வந்தது, யப்பானிய எதிரிகளின் கைகளுக்குள் வீழ்ந்துவிடுமோ என பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள் அஞ்சிக் கொண்டிருந்த வங்காளத்தில் 1943ல் 2 1/2 இலட்சம் மக்கள் பட்டினியால இறந்தனர். ஆண்டுதோறும் அதிகரித்து வந்த வேலைநிறுத்தம் 1942ல் 7, 72,653 தொழிலாளர்களை சேர்த்ததோடு 5, 77?,963 வேலை நாட்களை இழக்கச் செய்தது. யுத்தத்தின பின்னர் இது தொழிலாளர் போராட்டங்களின் உச்சக் கட்டத்தைக் குறித்தது. பட்டினிக்கும் அழிவுக்கும் எதிராகக் கிராமப் புறங்களில் விவசாயிகளின் கிளர்ச்சி பரவி வந்தது.

(தொடரும்)

வாசியுங்கள்!

சோவியத் யூனியனின் முடிவு

டேவிட் நேர்த்

கிடைக்குமிடம்-
90, 1வது
மளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு - 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ட்ரெட்ஸ்கிசம் நிரூபணமாகியுள்ளது"

(செப்டம்பர் 13ம் திகதி கொழும்பு பொது 'நூலக கேட்போர் கூடத்தில் பு. க. க. நடாத்திய லியொன் ட்ரொட்ஸ்கி படுகொலையின் 52வது ஆண்டு நிறைவை யொட்டிய உரையில் இருந்து)

லியொன் ட்ரொட்ஸ்கியும் அவர் கட்டி எழுப்பிய நான்காம் அகிலமும் தொடுத்த போராட்டம் முழுமனே நிரூபிக்கப்பட்டு, ஓரே மார்க்சிசக் கட்சி நான்காம் அகிலமே என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலைமையின் கீழ் தோழர். ட்ரொட்ஸ்கியின் இந்த 52வது நினைவு தினக் கூட்டம் நடைபெறுவதாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு உறுப்பினரான தோழர் எம். அரவிந்தன் குறிப்பிட்டார்,

''தோழர் லியொன் ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்தின் ஸ்தாபக வேலைத்திட்டத்தில் சோவியத் யூனியன் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''சோவியத் ரூஷ்யா பயங்கரமான முரண்பாடுகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது, ஆனால் அது இன்னமும் ஒரு சீரழிந்த தொழிலாளர் அரசாக இருந்து வருகின்றது. அரசியல் தீர்க்கதரிசனம் ஒரு மதிப்பீட்டுப் பண்பினைக் கொண்டுள்ளது. ஒன்றில் அதிகாரத்துவம் தொழிலாளர் அரசில் வரவர அதிகரித்த முறையில் உலக முதலாளிவர்க்கத்தின் கருவியாகி புதிய சொத்து வடிவங்களைத் தூக்கி வீசி நாட்டினை மீண்டும் முதலாளித்துவத்தினுள் மூழ்கடிக்கும்; அல்லது தொழிலாள வர்க்கம் அதிகாரத்துவதை நசுக்கி சோசலிசத்துக்கான பாதையை திறக்கும்.

''சோவியத் யூனியனில் அதிகாரத்துவம் அரசியல் புரட்சி மூலம் தூக்கி வீசப்படாததினால் துன்பகரமான முறையில் இன்று அங்கு முதலாளித்துவ அரசு தோன்றி உள்ளது. ரூஷ்யாவிலும் உலக ரீதியாகவும் ஸ்டாலினிஸ்டுகள் சோசலிசப் பரம்பரையினருக்கு எதிராக நடாத்திய படுகொலைகளே தொழிலாள வர்க்கத்தின் அமைப்பு ரீதியான எதிர்ப்பினை நசுக்கி முதலாளித்துவ அரசை உருவாக்க யெல்ட்சின் தலைமையிலான தரகு முதலாளித்துவத்திற்கு முடிந்துள்ளது.

''இவை ஏகாதிபத்திய முதலாளித்துவவாதிகள் மோசடிப் பிரச்சாரம் செய்வது போல் சோசலிசம், மார்க்சிசம் தோற்றுவிட்டதை குறிக்கவில்லை. மாறாக, மார்க்சிச விரோத 'தனிநாட்டில் சோசலிசம்' என்ற ஸ்டாலினிச வேலைத்திட்டத்தின் தோல்வியையும், உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தின் சரியான தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது,

''ஸ்டாலினிச அதிகாரத்துவம் பொறிந்தது மாத்திரமில்லை இன்று ஏகாதிபத்தியம் என்றுமில்லாதவாறு நெருக்கடியில் ஆழ்ந்துள்ளது. இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் உலகத்திற்கே கடன் வழங்கிய அமெரிக்கா இன்று உலகிலேயே அதிகூடிய கடனாளிநாடாக மாறியுள்ளது. அமெரிக்காவின் இரண்டாவது பெரிய நகரமான லொஸ் எஞ்சலில் அண்மையில் நடந்த கலவரங்கள் அமெரிக்காவில் உருவாகி வரும் சமூகக் குமுறலை எடுத்துக்காட்டுகின்றது. இந்நெருக்கடியில் இருந்து தலையெடுக்கும் முகமாக ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக யுத்தத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. ஈராக், யூகோசலவியாவுக்கு எதிரான யுத்தத் தயாரிப்புக்கள் இதன் ஒரு பாகமாகவே நடைபெறுகின்றது.

''சோவியத் யூனியனில் அதிகாரத்துவத்தின் பண்பு ரீதியாக மாற்றம் உலக ரீதியான அதிகாரத்துவத்தின் மாற்றத்தின்ஸ்தூலமானவெளிப்பாடாகும். இன்று உலக ரீதியாக அதிகாரத்துவங்கள் சிறு உரிமைக்குத் தன்னும் போராடுவதற்கு எதிராக முதலாளித்துவத்துடன் கோப்பிரேட் நடைமுறைக்குச் சென்றுள்ளன, அமெரிக்காவில் ஏ. எப். எல் சீ. ஐ. ஓ, பிரிட்டனில் தொழிற்கட்சி, இந்தியாவில் சீ. பி, ஐ., சீ, பி. எம், போன்ற ஸ்டாலினிச கட்சிகள் இலங்கையில் சமசமாசக் கட்சி., கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜ கட்சிகளுள் இத்தகைய ''கோப்ரேட்'' நடைமுறையைக் காணமுடியும்.

''ஏனஸ்ட் மண்டலின் இலங்கைச் சகாக்களான நவசமசமாஜக் கட்சியினர் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். புசல்லாவ ரொத்சைல்ட் தோட்டத்தில் ஆளும் வர்க்கத்தின் இனவாத ஆத்திரமூட்டல் வேலைத் திட்டத்திற்கு எதிராக சிங்களத் - தமிழ் தொழிலாளர்கள் நடாத்திய வேலைநிறுத்தத்தை இனவாத வேலைநிறுத்தமாக நவசமசமாசக் கட்சியின் சிங்களப் பத்திரிகையான 'ஹரய' ஆசிரியத் தலையங்கம் தீட்டியது.

தோட்டத்துறையில் செங்கொடிச் சங்கத்தின்ஸ்டாலினிசத் தலைமை, தோட்டத் தொழிலாவர்களுக்கு எதிரான சிங்கள இனவாதத் தாக்குதலுக்கு எதிராக இனப் படுகொலை நடாத்தும் யூ, என். பி. அரசாங்கத்திற்கு 11 வருடங்களாக் முண்டு கொடுத்துவரும் இ. தொ. கா.வை பலப்படுத்த வேண்டும் எனக் கூறுகின்றது. இந்த அதிகாரத்துவங்கள் தாங்கள் சார்ந்து நிற்கும் முதலாளித்துவத்தின் இனவெறிப் பிரச்சாரத்தில் ஒன்றிணைவதன் மூலம், தொழிலாளர்களை இன, மத மொழி அடிப்படையில் கூறு போடுவதற்கு நனவாகத் தொழிற்படுகின்றது'

''இத்தலைமைகளின் சீரழிவு அவர்களின தனிப்பட்ட பண்பை பொறுத்தது அல்ல அவர்கள் அடிப்படையாக கொண்ட தேசிய வாத வேலைத் திட்டத்தின் வங்குரோத்தையே எடுத்துக் காட்டுகின்றது. இத்தலைமைகளை தொழிலாளி வர்க்கத்தில் இருந்துதுடைத்துக் கட்டுவதற்கு, உலகச் சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நா[illegible]காம் அகிலத்தை உலகக் [illegible]சியாக கட்டி எழுப்புவதிலேயே தொழிலாள வர்க்கத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது''.

# உலகம் பூராவும் நாணய....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன் மேஜர் அரசாங்கம் ஸ்டேர்லிங் பவுணுக்கு முண்டு கொடுக்க வட்டி வீதத்தை நூற்றுக்கு 5%ஆல் அதிகரித்தது. இம்முயற்சி தோல்வி கண்டதைத் தொடர்ந்து, வட்டி வீதத்தைக் குறைத்து ஐரோப்பிய நாணய அமைப்பில் இருந்து பவுணை வெளியே எடுத்தது, இவை அனைத்துக்கும் ஜேர்மன் அரசாங்கம் வட்டி வீதத்தை 12%ஆக அதிகரித்ததே காரணம் என பிரித்தானியா குற்றம் சாட்டியது, பொருளாதாரத்தை வீங்கச் செய்ய நடவடிக்கை எடுப்பதாகக் கூறி மேஜர் அரசாங்கம் வட்டி வீதத்தை நூற்றுக்கு10%ஆகக் குறைத்துள்ள போதிலும் அதனால் பலன் கிட்டவில்லை. அக்டோபர் 2ம் திகதி அளவில் பிரித்தானிய பவுண் 2·43 (ஜேர்மன்) மார்க்குக்கும் குறைவாக வீழ்ச்சி கண்டது, மாஸ்ரிவ் உடன்படிக்கைக்கு அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் 'சம்மதம்' பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் போவதாக மேஜர் அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் கன்சர்வேடிவ் கட்சி அரசாங்கத்தின் ஒரு கோஷ்டியினர் இந்த உடன்படிக்கையில் இருந்து பிரித்தானியா நிரந்தரமாக விலகிக் கொள்ள வேண்டும் என்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நாணயப் பதட்டங்களுக்கு மத்தியில் வாஷிங்டனில் கூடிய G—7 நாடுகளின் (அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா, யப்பான், ஜேர்மனி, இத்தாலி) நிதி அமைச்சர்களும், மத்திய வங்கி அதிபர்களும் — 8மணித்தியால கலந்துரையாடலின் பின்னர் — வட்டி வீத சமத்துவமின்மையை போக்குவது சம்பந்தமாக எதுவித உடன்பாடும் இல்லாமலேயே கலைந்து சென்றுள்ளனர். பிரான்சும், ஜேர்மனியும் 'குட்டி ஐரோப்பிய' நாணய கூட்டினை அமைப்பது பற்றிய இரகசிய உடன்படிக்கையைச் செய்து கொண்டுள்ளதாக செப்டம்பர் 2ப் திகதிய ஜேர்மன், பிரான்சிய பத்திரிகைகள் அறிவித்தன. இதனை பிரான்சிய, ஜேர்மன் அதிகாரிகள்மறுத்தபோதிலும்பவுணைப்பாதிக்கும் விதத்தில் ஜேர்மனி பிராங்குக்கு (பிரான்ஸ் நாணயம்) ஆதரவளிப்பதை பிரித்தானிய அதிகாரிகள் கண்டித்துள்ளனர். பிரான்சிய நாணயமான பிராங்கினை பேணும் பொருட்டு பிரான்சிய மத்திய வங்கியும் (ஜேர்மன்) பண்ட்ஸ் பாங்கும் கோடிக்கணக்கான பிராங்குகளை கொள்வனவு செய்ததோடு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோலும் பிரான்சு ஜனாதிபதி மிட்ரண்டும் பாரிசில் கூடி இரகசிய பேச்சுக்கள் நடாத்தி உள்ளனர்,

இந்த நாணய நெருக்கடி இவ்வாண்டின் இறுதியில் தனியொரு ஐரோப்பியச் சந்தையை அமைப்பது பற்றிய ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான திட்டத்தைச் சிதறடித்துள்ளது. தொழிலாளி வர்க்கத்தினை பொறுத்தமட்டில் இந்த நிதி, நாணய நெருக்கடியானது ஐரோப்பா பூராவும் தொழிலாளி வர்க்கத்தின் தொழில், வாழ்க்கைத் தரம், சமூக சேவைகள் மீதான அரசாங்க தாக்குதல்களை உக்கிரமடையச் செய்துள்ளது. 40 ஆண்டுகளுக்கு மேலாக தீர்க்கமான போராட்டங்கள் மூலம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் வென்றெடுத்த உரிமைகள் ஒரே நாளில் துடைத்துக் கட்டப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய சந்தை அங்கத்துவ நாடுகளில் ஒன்றான இத்தாலிய ஆளும் வர்க்கம் தொடுத்துள்ள தாக்குதல் இதற்கு நல்ல எடுத்துக் காட்டு. பிரதமர் அமாட்டோ அரசாங்கம், செப்டம்பர் 17ம் திகதி வரவு-செலவுத் திட்டச் செலவினங்களை 75000கோடி டாலர்களால் வெட்டியுள்ளது. வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன, முதியோர் ஒய்வூதியம், தேசிய சௌக்கிய சேவை மீது பெரும் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெறும் வயதெல்லையை அரசாங்கம் 55ல் இருந்து 60ஆக அதிகரித்துள்ளது.

ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள இந்நெருக்கடி அனைத்துலகத் தொழிலாளி வர்க்கம் முகம் கொடுக்கும் அடிப்படையான பிரச்சினையை — புரட்சிகரத் தலைமை நெருக்கடி பிரச்சினையை மீண்டும் அம்பலப்படுத்தி உள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் சகல பழைய அமைப்புக்களும் — அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் — தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவ எதிர்த் தாக்குதலுடன் சேர்ந்து கொண்டுள்ளன. பழைய சோவியத் யூனியன் போன்ற ஸ்டாலினிச ஆட்சி நடைபெற்ற நாடுகளில் இவர்களால் போஷித்து வளர்க்கப்பட்ட கொம்பிரதோர்' கும்பல்கள் ஏகாதிபத்திய பகற்கொள்ளையை ஊர்ஜிதம் செய்ய முன்வந்துள்ளனர். பிரித்தானியாவில் கடந்த மாதம் நடைபெற்ற தொழிற்சங்க காங்கிரசின் (T.U,G) மகாநாட்டில் — கடந்த 124 ஆண்டுகள் இல்லாத விதத்தில் முதலாளிகள் சம்மேளனத்தின் தலைவர் ஹொவாட் டேவிஸ் இம் மகாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தார். இது இந்த தொழிற் சங்க அதிகாரத துவங்கள் எந்த விதத்தில் ஆளும் வர்க்கத்தின் ஏஜண்டுகள் ஆகியுள்ளன எனபதைக் காட்டுகின்றது,

## இலங்கை நிலைமை

இலங்கையில் இ. தொ. கா தொண்டமான் — செல்லச்சாமி தலைமை ஆளும் வர்க்கத்தின் கடைகெட்ட திட்டங்களை தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்க பிரேமதாச அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டுள்ளனர். சமசமாஜ—கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் இத் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்கள் கிளர்ந்து எழுவதைத் தடுக்கும் கால்கட்டு போடும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இதை நிரூபிக்கும் விதத்தில் சமசமாஜக் கட்சியின் திட்டமிடலாளரான ஹெக்டர் அபேவர்தனா ஒரு கட்டுரை எழுதியுள்ளார், அதில் இந்த துரோக முதலாளித்துவ அரசியல் வாதி கூறுவதாவது:

''இந்த நிலையங்களுக்கு இடையே உலக ஆதிக்கத்துக்காக போட்டி ஏற்படுவதில் சந்தேகம் இல்லை. ஆனால் போட்டி உலக யுத்தத்தை நோக்கிச் செல்ல இடமுண்[illegible] என கூறுவது கஷ்டம். [illegible]ழில் நுட்பத்தின் முன்னேற்றத்தினால் யுத்தம் என்ற ஆயுதத்தைப் பொருளாதார அல்லது அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்த முடியாதிருப்பதே அதற்கான விசேட காரணம்'' ('பிரவாத' 1992 ஜூலை—ஆகஸ்ட்)

ஏகாதிபத்திய அமைப்பின் இன்றைய நிதி, நாணய நெருக்கடி இத்தகைய பகற்கனவு காணு பச்சோந்திகளின் 'ஆய்வுகளை' தவிடு பொடியாக்கியுள்ளது. ஹெக்டர் அபேவர்தனாவின் இந்த 'ஆய்வு' பழைய 'தொழிலாளர்' கட்சிகளதும்' தொழிற்சங்கத் தலைமைகளையும் அரசியல், வேலைத் திட்டத்துக்கு நல்ல சான்று, ஏகாதிபத்திய நெருக்கடி தொழிலாளி வர்க்கத்துக்கு விடுத்துள்ள புதிய சவால்களின் மத்தியில் எமது புரட்சிகர முன்நோக்கு. வேலைத் திட்டங்களை ஆய்வு செய்யும் படியும் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கப்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறும் நாம் சகல தொழிலாளர், இளைஞர்களை வேண்டுகின்றோம்.

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 12ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org